விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka
13 JUL 2010

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பதினெட்டு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 29 செவ்வாய்க்கிழமை (13.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 206

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் இன்று காலை கண்டன ஆர்ப்பாட்டம்

### குடும்பநல உத்தியோகத்தர்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடும்பநல உத்தியோகத்தர் ச.தர்சிகாவின் மர்ம மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு உரிய தீர்வை வழங்கக் கோரி குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கம், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஆகியன இணைந்து இன்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்.

தர்சிகாவின் மர்ம மரணம் தொடர்பாக உரிய விளக்கம் வழங்க வேண்டும் எனக் குடும்பநல உத்தியோகத்தர் சங்கம் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியிருந்தது.

எனினும் அவரது (18 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பநல உத்தியோகத்தர் மர்ம மரணம்

## மூவர் அடங்கிய குழுவினரின் விசாரணைகள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலையில் கடமையிலிருந்தபோது மர்மமான முறையில் உயிரிழந்த குடும்பநல உத்தியோகத்தர் தர்சிகா சரவணையின் மரணம் தொடர்பாக ஆரம்பக்கட்ட விசாரணையினை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மேற்கொண்டுள்ளதாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வேலணை வைத்தியசாலையில் கடமையிலிருந்தபோது உயிரிழந்த குடும்பநல உத்தியோகத்தரின் மர்ம மரணம் தொடர்பாகச் சுகாதாரத் (18 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலமைப்பு திருத்தம் குறித்து

# ஜனாதிபதி-ரணில் சந்தித்துப் பேச்சு

## நிறைவேற்று அதிகாரப் பிரதமருக்கும் இணக்கம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று மாலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அலரி மாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது அரசியல் அமைப்புத் திருத்தம் குறித்துத் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.** (02 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் என்றால் என்ன என்பதை தியாகி திலீபனிடம் கற்றுக் கொள்ளுங்கள்

### சிறிதுங்க ஜெயசூரிய ஆலோசனை

(கொழும்பு)

உண்ணாவிரதம் என்றால் என்ன? என்பதைத் தியாகி திலீபனிடம் ஜனாதிபதியின் இயக்கத்தில் நடித்த விமல் வீரவன்ச கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய சோசலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு எதிரான விமல் வீரவன்சவின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசு தவறு செய்யவில்லை என்றால் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கு முகம் கொடுக்க ஏன் தயங்குகின்றது?

நிபுணர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## கபில்நாத் கொலை வழக்கு சந்தேக நபர்கள் மூவர் விடுதலை

சாவகச்சேரி மாணவன் கபில்நாத் கொலை தொடர்பாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் மூவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் முதலாவது சந்தேக நபரான ஜீவன் என்றழைக்கப்படும் குமாரசிங்கம் கேசவனின் தாயாரான குமாரசிங்கம் திருப்பதியம்மா, அவரது சகோதரியான குமாரசிங்கம் குகன்ஜா மற்றும் ஆசிரியர் கணேசானந்தராஜா தயாராஜ் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கு நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ச-5)

## ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்துப் பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தேசம்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்வைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயன்முறையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு இந்தியத் தலைவர்கள் தமக்கு ஆலோசனை வழங்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்கள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பிலான நிலைப்பாடும் வெளியிடப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ மயப்படுத்தல்கள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வைக் கண்காணிக்க இந்தியக் குழு இலங்கை வரும்

(கொழும்பு)

போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் சீராக இடம்பெற்றுள்ளனவா? என்பதைக் கண்காணிக்கும் நோக்கில் இந்தியக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த விசேட இந்தியக் குழுவினர் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களை நேரில் பார்வையிட்டுத் தகவல்களைத் திரட்டிக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்வதாகப் பிரதி மீள்குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 மாதக் காலப் பகுதிக்குள் எஞ்சியுள்ள இடம்பெயர் மக்களை மீள்குடியேற்ற முடியும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

## ஐ.நா. சபைக்கு எதிராக ஜெனீவாவில் போராட்டம்

### விமல் எச்சரிக்கை; பூனே மீள அழைப்பு

(கொழும்பு)

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியினர் மீண்டும் ஐ.நாவுக்கெதிராக ஜெனீவாவில் போராட்டத்தை நடத்தப் போவதாக எச்சரித்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே மீண்டும் பான் கீ மூனால் நியூயோர்க்கிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ள இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பிலான நிபுணர் குழுவைக் கலைக்கக் கோரி கடந்த வாரம் அமைச்சர் விமல் வீரவன்ச சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் பூனே, பான் கீ மூனால் திருப்பி அழைக்கப் (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், பிரதேசசபைச் செயலாளர் கெ.தவராசா தலைமையில் சாட்டி சுற்றுலா மையப்பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இதில் பிரதேச சபைச் செயலாளர் உட்பட பணியாளர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் சிரமதானப்பணியின் பின்னர் தூய்மையாக காட்சி தரும் சாட்டி சுற்றுலா மையப்பகுதியையும் படங்களில் காணலாம்.

# அரசியலமைப்பு திருத்தம் குறி...

ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட ஐக்கியதேசியக்கட்சியின்பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு நேற்று மாலை அலரிமாளிகையில் நடைபெற்றது.

இப் பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தரப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, சுசில்பிரேம ஜெயந்த, தினேஸ் குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும, பசில்ராஜபக்ஷ, நிமல்சிறிபாலடிசில்வா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஐ.தே.க. தரப்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கருஜெயசூரிய, திஸ்ஸ அர்த்தநாயக்க, காமினி ஜெயவிக்கிரம பெரேரா, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இச் சந்திப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் வகையிலான நிறைவேற்று அதிகாரம் உள்ள பிரதமர் பதவியை ஏற்படுத்துவதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் தொடர்ந்து பேச்சுவார்த்தைநடத்துவதற்கும் இணக்கம்காணப்பட்டுள்ளது. தேர்தல் முறை தொடர்பாகவும் இணக்கம் காண்பதற்கு முயற்சிக்கப்படும் எனக் கூறிய ரணில் விக்கிரம சிங்க தற்போதைய விகிதசார பிரதிநிதித்துவ முறையும் தொகுதி வாரி பிரதிநிதித்துவ முறை கலந்த புதிய தேர்தல் முறையை அறிமுகப் படுத்துவதற்கு இரு தரப்பினரும் முயற்சிப்பதாகவும் கூறினார்.

மக்களுக்கு நட்புறவான அரசியல் அமைப்பை அறிமுகப்படுத்த நாம் முயற்சிக்கிறோம்.

அரசாங்கத் துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும் அதேவேளை அத்தகைய அரசியல் அமைப்பையும் வாழ்க்கைச் செலவை குறைக்கவும் வலியுறுத்தி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், தனிப்பட்ட நலன்களை அல்லாமல் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்ட அரசியல் அமைப்பை அறிமுகப்படுத்த வேண்டிய தன் அவசியத்தைவலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் தலைமை எப்போதும் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறும் வகையிலானதாக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ச-5)


வலி தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## ஏல விற்பனை

மேற்படி எமது சங்கத்தில் உள்ள 02 ஆட்டுக்கடாக்கள் (ஜமுனாபாரி) 14.07.2010 புதன்கிழமை காலை 10 மணியளவில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. ஏலம் கேட்க விரும்புவோர் மீளளிக்கப்படும் கட்டுப்பணம் ரூபா 500/= செலுத்தவேண்டும்.

கொள்வனவு செய்வோர் பணம் முழுவதும் உடன் செலுத்தி அன்றைய தினமே கொள்வனவு செய்ய வேண்டும்.

7 ஆம் கட்டை
சண்டிலிப்பாய்

(1848)

## முந்துங்கள்... முந்துங்கள்...

கொக்ககோலா வாடிக்கையாளர்களே முந்துங்கள் உங்களிடம் உள்ள இலவச சோடா மூடிகளை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக கொக்ககோலா விநியோகஸ்தர்களான சிவா பிறதர்ஸிடம் (Siva Brothers) கொடுத்து அதற்குரிய இலவச சோடாக்களை பெற்றுக் கொள்ளவும். அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்

விநியோகஸ்தர்கள் : சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5497

(1836)

## Vacancies

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் INNOVAGE COMPANY க்கு 20 Staffs தேவை. Training, Supervisor, Assistand Manager, Manager. அனுபவம்தேவையில்லை. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு.

தொடர்புக்கு : 0214905001
0214900350
0214900001

(1846)

## விற்பனைக்கு

இல. 96 காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள 2 கடைகளும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்
இல.33 கண்ணபுரம்
யாழ்ப்பாணம்.
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
T.P : 0773317904
0776559683

(1843)

தரம் 5 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு - 2010

24ஆம், 25 ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் "வித்யா கீர்த்தி சிறி சம்மான" மட்டுநகர் ந.சந்திரகுமார் ஆசனம் மற்றும் ஒழுங்கமைப்பு செய்தல் பொருட்டு 15.07.2010க்கு பின் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு :-
Mathuram Institute
Dutch Road, Irupalai Kopay South.
0779122918,
0775581626

(1842)





மகேஸ்வரி நிதியத்தில் மணல் பெறுவதற்காக பணம் செலுத்துவோர் தமக்குரிய மணல் கிடைக்கும் திகதிகளை அவர்கள் பணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கத்தின் அடிப்படையில் (ப.இல) தெரிந்து கொள்ள முடியும்.

| 14 th July 2010 | | | 15 th July 2010 | | | 16 th July 2010 | | | 17 th July 2010 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2363 | 4225 | 3307 | 2389 | 3093 | 1786 | 2389 | 4195 | 3693 | 2847 | 3299 | 4009 |
| 2849 | 3823 | 3356 | 2454 | 3383 | 3147 | 2718 | 3823 | 3693 | 2110 | 3108 | 3886 |
| 2860 | 4697 | 3692 | 2423 | 3900 | 4728 | 2848 | 4697 | 3669 | 2426 | 2194 | 3400 |
| 2860 | 4161 | 3225 | 2153 | 3088 | 1792 | 2322 | 4159 | 3192 | 2153 | 2983 | 3668 |
| 2108 | 3278 | 3745 | 2749 | 3405 | 3344 | 2110 | 2909 | 4140 | 2757 | 3392 | 5033 |
| 2455 | 2647 | 4140 | 2773 | 3839 | 3750 | 2921 | 3290 | 1826 | 2776 | 3863 | 5038 |
| 2917 | 3286 | 1824 | 2691 | 3206 | 2916 | 2425 | 3039 | 3147 | 2693 | 3081 | 5037 |
| 2436 | 3039 | 3146 | 2414 | 3272 | 3998 | 2153 | 3200 | 4728 | 2571 | 3408 | 1033 |
| 2008 | 3638 | 4853 | 2356 | 3134 | 1244 | 2749 | 3297 | 1792 | 2357 | 3837 | 3600 |
| 2574 | 3324 | 1792 | 7599 | 3228 | 3396 | 2775 | 3106 | 3344 | 2469 | 3671 | 3664 |
| 2408 | 3105 | 3328 | 4163 | 4851 | 3792 | 2691 | 2194 | 3750 | 2755 | 3293 | 4017 |
| 2787 | 2213 | 3738 | 2831 | 3782 | 2310 | 2572 | 2982 | 2916 | 3979 | 3136 | 3192 |
| 2414 | 2988 | 2916 | 2095 | 3301 | 5033 | 2406 | 3383 | 3999 | 2397 | 3228 | 3357 |
| 2798 | 3381 | 4048 | 7704 | 3198 | 5038 | 2787 | 3862 | 3386 | 2577 | 3698 | 3357 |
| 2355 | 3991 | 1244 | 3986 | 4862 | 5037 | 2414 | 3088 | 3396 | 2543 | 3786 | 3193 |
| 2579 | 3151 | 3371 | 3980 | 3340 | 597 | 3979 | 3408 | 3668 | 2856 | 3301 | 3823 |
| 2550 | 3398 | 3792 | 3901 | 4575 | 4345 | 2397 | 3838 | 5033 | 2041 | 3217 | 4697 |
| 7599 | 3839 | 5053 | 2331 | 4398 | 3286 | 2578 | 3779 | 5038 | 2382 | 4862 | 4159 |
| 4163 | 3206 | 5053 | 2830 | 3308 | 3039 | 2549 | 3271 | 5037 | 3986 | 3336 | 3358 |
| 2953 | 3276 | 5038 | 2744 | 4866 | - | 4163 | 3135 | 597 | 3980 | 4575 | - |
| 2099 | 3133 | 5037 | 2044 | 3665 | - | 2855 | 3228 | 3598 | 3901 | 3774 | - |
| 2016 | 3227 | 80 | 4224 | 4016 | - | 2043 | 3721 | 3665 | 4202 | 3597 | - |
| 3986 | 3279 | 4343 | 4195 | 3199 | - | 2123 | 3784 | 4016 | 2791 | 3486 | - |
| 3980 | 3780 | 3651 | 3823 | 4866 | - | 3986 | 3301 | 4575 | 2995 | 1826 | - |
| 3901 | 3261 | 4015 | 4697 | 3356 | - | 3980 | 3212 | 3774 | 2444 | 3149 | - |
| 2331 | 4769 | 2743 | 4159 | 3692 | - | 3901 | 4862 | 3310 | 4224 | 4728 | - |
| 2829 | 4862 | 3692 | 2647 | 3692 | - | 4202 | 3336 | - | 4317 | 1792 | - |
| 2044 | 3340 | - | 3296 | 3225 | - | 2791 | 2444 | - | 3290 | 3350 | - |
| 4224 | 4705 | - | 3106 | 3755 | - | 2745 | 3486 | - | 3037 | 3728 | - |
| 4866 | 4398 | - | 2150 | 4140 | - | 4224 | 3358 | - | 3201 | 3323 | - |

குறித்த தினத்தன்று குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்குரிய பயனாளிக்கு மணல் கிடைக்க தவறும் பட்சத்தில் உடனடியாக 021-2226837 என்னும் இலக்கத்திற்கு அலுவலக நாட்களில் மாலை 3.30 தொடக்கம் 5.00 மணிவரை முறையிடவும். - தம்பித்துரை றஜீவ் (செயற்றிட்ட இணைப்பாளர்) (C-638)

# இன்று ஒரு தகவல்

## வியப்பு

நண்பர் ஒருத்தர் அவசரமாக ஓடி வந்தார். "என்ன ?" என்று கேட்டேன்.

"என்னால் நம்பவே முடியவில்லை சேர். என் மகனா இப்படி?" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்.

"உங்களுடைய மகன் அப்படி என்னதான் செய்து விட்டான்?" என்றுகேட்டேன்.

"என்னால் முடியாத காரியத்தை அவன் செய்து விட்டான் சேர் "என்றார்.

"அது என்னவென்று சொல்லுங்களேன்" என்றேன்.

" ஐந்தாவது வகுப்பில்ஒரே தடவையில் பாஸாகி விட்டான் சேர்"என்றார் மூச்சு வாங்க. கஷ்டப்பட்டு பரீட்சை எழுதியது அவன். இவருக்கு ஏன் மூச்சு வாங்குது? நம்மால் செய்ய முடியாத ஒரு காரியத்தை இன்னொருவர் செய்யும் போது அது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

சேர்க்கஸ் பார்க்கிறோம். ஒருத்தர் அந்தரத்தில் தொங்குகிறார். அது நமக்கு ஆச்சரியம். ஏனெனில் அது நம்மால் முடியாத காரியம். நம்மால் முடியாத ஒன்றை பிறர் எளிதாகச் செய்யும் போது நாம் மருள்வது இயற்கை. இதைத்தான் தொல்காப்பியம் "மருட்கை" என்று சொல்கிறது.

இந்த வியப்பு இருக்கிறதே.... இது நான்கு வகை என்று தொல்கர்பியம் கூறுகிறது.

முதல்வகை – புதுமையான அரிய செயல்களைச் செய்வது.

இரண்டாவது வகை– பெரும் செயல்களைச் செய்வது.

மூன்றாவது வகை–மிக நுட்பமான செயல்களைச் செய்வது.

நான்காவது வகை– ஆக்கம் தரும் செயல்களைச் செய்வது.

"புதுமை , பெருமை , சிறுமை, ஆக்கமொடு மதினம் சாலா மருட்கை நான்கே"–தொல்காப்பியம்.

இன்றைக்கு விஞ்ஞானம் புதிது புதிதாக எதையோ கண்டுபிடிக்கிறது. ஆரம்பத்தில் அது ஆச்சரியமாக இருக்கிறது. அதன் பின் அது நமக்குப் பழகிப்போய் விடுகிறது.

மிக நுட்பமான செயல்களும் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு அரிசியில் ஒரு திருக்குறளை எழுதிக் காட்டுகிறார்கள். ஒரு முட்டை ஓட்டுக்குள் ஓவியம் தீட்டிக் காட்டுகிறார்கள்.

கருங்கல் சிற்பங்களில் எவ்வளவு நுட்பமான வேலைப் பாடுகளையெல்லாம் பார்த்து ஆச்சரியப்படுகிறோம்.

இதுபோலவே ஆக்கபூர்வமான அரிய செயல்களைச் செய்வது கூட வியப்பை உண்டு பண்ணுகிறது.

இடைக்காட்டுச் சித்தர் பாடிய மூவடிமுப்பது என்னும் நூலில் வரும் ஒருபாடல் இது:

" ஆற்றல் பிறர் அறிதலின் அகம் கிளர்வு உறுதலின் கற்று அறியாணர் கெழுமிய கோடலின் தோற்றம் உறுகவே போற்றல்சால் வியப்பே!"

ஒருத்தருடைய ஆற்றல் தெரியாமல் இருந்தது. அவருடைய செயலைப் பார்க்கும் போது மனதுக்குள் கிளர்ச்சி.

ஆக, எல்லாவகையிலும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழிகாட்டும் ஒரு மெய்ப்பாடுதான்' வியப்பு'என்பது.

இந்தக் காலத்தில் நம்மை எப்படி எப்படியெல்லாமோ ஆச்சரியப்பட வைக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆளைப் பிடித்து சிறைக்குக் கொண்டு வந்தார்கள்.

சிறை அதிகாரி அவனை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார்.

இவன் கேட்டான்:"ஏன் சேர் அப்படிப் பார்க்கிறீங்க? நான் இப்ப இங்கே வாறது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா?"என்று கேட்டான்.

இதற்கு சிறை அதிகாரி சொன்னார்:

"நீ இப்ப இங்கே வந்ததில் எனக்கொன்றும் ஆச்சரிய மில்லையப்பா... ஏற்கனவே நீ இங்கேயிருந்து விடுத லையாகிப் போய் ஆறுமாதம் ஆகிவிட்டது. இவ்வளவு லேட்டா இங்கே வருகிறாயே... அதுதான் எனக்கு ஆச்சரியம்"என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த.(சா/த)பரீட்சையில் பெறுபேற்று தரங்கள் ஆறாக உயர்த்தப்படவுள்ளது

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் போது வழங்கப்படும் தரங்களின் எண்ணிக்கையை ஆறாக உயர்த்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு இதுவரை காலமும் ஏ,பி,சி,எஸ் மற்றும் எஃப் என 5 தரங்களில் பெறுபேறுகள் வழங்கப்பட்டன.

என்னும் புதிய முறையின் கீழ் ஏ.பி.சி.எஸ். என் மற்றும் டபிள்யூ (A,B,C,S,N,W) என 6 தரங்கள் வழங்கப்படுமெனவும் இதற்கமைய 25 முதல் 34 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கும் தரமொன்று வழங்கப்படவுள்ளதா தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கணித பாடத்தில் இத்தரத்தைப் பெறும் மாணவர்கள் உயர் தரத்தில் அனுமதி பெறுவதற்குத் தகுதி பெறக்கூடியதாக இருக்குமெனக் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன கூறுகையில் , புதிய முறைமை காரணமாகத் தற்போது உயர்தரத்திற்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக் கை 11 வீதத்தால் உயர்வடையுமெனக் குறிப்பிட்டார். (6-4)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசைத்தினம் நாளை புதன் கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகப் பாடல்கள் பாராயணம் செய்யப்படவுள்ளன. (6-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெற இருப்பதால் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை கரந்தன் , நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை,கல்வியங்காடு மற்றும் தென்மராட்சி பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (4)

# உள்ளூராட்சி வார இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ் மாநகர சபையினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இரண்டாம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை கல்வி நூல்நிலைய விளையாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் யாழ் பொதுசன நூல் நிலையத்தில் சிறுவர் வாசிப்பு நூல்களும் வாசிப்பு சாதனங்களும் காட்சிப்படுத்தல், பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வு, பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கல், சிறந்த சனசமூக நிலையத் தெரிவினை மேற்கொள்ளல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன. (6-4)

# விஞ்ஞானமாணிப்பட்ட கற்கைநெறிக்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் தாதியருக்கான விஞ்ஞான மாணி பட்டக் கற்கை நெறியின் தொடர் மதிப்பீட்டு பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# ஆசிரிய கலாசாலைகளில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றாதோருக்கு

(கொழும்பு)

ஆசிரியர் கலாசாலைகளில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் இறுதிப் பரீட்சையை நிறைவு செய்யாத ஆசிரியர்களுக்கு அப் பரீட்சைக்கு மீண்டும் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றாத ஆசிரியர்கள் உரிய தகவல்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பணியின் பணிப் பாளர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (6-4)

# இராசி பலன்

13.07.2010
(ஆனி 29, செவ்வாய்க்கிழமை)
துதியை முன்னிரவு 9.18 மணிவரை
பூசம் பிற்பகல் 2.16 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மாதா சுகம் , சுபகாரியம் , வாகனசுகம் , மனச் சஞ்சலம். |
| இடபம் | உறவினர் சந்திப்பு , தனவருவாய் , காரிய நன்மை , பிரயாண சுகம். |
| மிதுனம் | உணர்ச்சி வசப்படுதல் , தன விரயம் , முயற்சி தாமதம் , போசன சுகக் குறைவு. |
| கடகம் | பெரியோர் சந்திப்பு , சயனசுகம் , கற்பனை மிகுதி , புதிய முயற்சி. |
| சிங்கம் | பிதா சிந்தை , காரிய அலைச்சல் , தொழில் நன்மை , சயன சுகக் குறைவு |
| கன்னி | மனமகிழ்ச்சி , உறவினர் வருகை , எடுத்தகாரியம் கைகூடும் ,பொருட் சேர்க்கை. |
| துலாம் | சுபநிகழ்வு , தொழில் மேன்மை , நிலைமாற்றம் , முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல் , ஆன்றோர் சந்திப்பு , பிரயாண நன்மை , முயற்சி தாமதம். |
| தனுசு | எதிர்பாராத பகை , பிரயாண பயம் , கௌரவக் குறைவு , முயற்சி தாமதம். |
| மகரம் | காரிய அனுகூலம்செய் தொழில் விருத்தி , திடீர் பயணம் , பண வருவாய். |
| கும்பம் | முயற்சி கைகூடும் , உற்சாகம் , பகைவர் நேசம் , தேகநலன். |
| மீனம் | வியாபார நன்மைகாரிய இடையூறு , தனவிரயம், புத்திரரால் மனஸ்தாபம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 130 |
| தக்காளி | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 |
| கோவா | 80 | 50 |
| கரட் | 150 | 120 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80-90 |
| பெரிய வெங்காயம் | 70 | 40 |
| பாகற்காய் | 120 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 70 |
| லீக்ஸ் | 130 | 120 |
| பீற்றூட் | 80 | 60 |
| கறிமிளகாய் | 140 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 140 |
| போஞ்சி | 120 | 90 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 |

# வேலணை வைத்தியசாலையில் டாக்டரின் பேயாட்டம்

எங்களுக்கு நிம்மதியே கிடையாது. துப்பாக்கிச்சூடு,வெட்டுக்கொத்து, கொலை பாலியல் பலாத்காரம் இவைதான் எங்கள் துன்பப்பட்டியல். இந்தத் துன்பத்திற்கு முடிவும் இல்லை ;விடிவும் இல்லை.

யுத்தம் வாட்டி வதைத்தது. உயிரிழப்புக்கள்,சொத்து அழிவுகள் இத

விம்மி விம்மி அழுதார். சக பணியாளர்கள் அவருக்கு ஆறுதல் கூறமுடியாமல் தவித்தனர்.கூடவே இரவு வேளையிலும் வைத்தியசாலைக் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் டாக்டரின் சத்தத்தில் மிரண்டு போயினர்.

என்ன செய்வது ஏன் டாக்டர் இப்



தர்சிகாவுக்கு இறுதி அஞ்சலி

சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள் உறங்குவது போல தர்சிகா வைப்பார்த்தனர்.

அந்த பிள்ளைக்கு எங்களால் உதவ முடியவில்லை என்ற வேதனை அவர்களின் நெஞ்சங்களை அடைத்துக் கொண்டது. 10 ஆம் திகதி காலை 7மணிக்கு சீருடையுடன் வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்ட தர்சிகா,

தனது கையடக்கத் தொலைபேசியைத் திருப்பித்தருமாறு டாக்டரிடம் வினயமாகக் கேட்க, அவர் மீண்டும் தாண்டவம் ஆடினார். காலை வேளையில் கூட தனது இரத்தக் கொதிப்பை டாக்டரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

சில மணி நேரங்கள் அமைதியாக கடந்தன. அந்த அமைதிக்குள் நோயாளர்களை சோதிக்கும் பணி ஒருபுறத்தில் ஆரம்பமான போது தர்சிகா எங்கே? சக பணியாளர்கள் தேடிக்கொள்ள அவர்களோடு சேர்ந்து டாக்டர் செனவிரத்னவும் தர்சிகாவை தேடுமாறு கூறியுள்ளார்.

விடுதியை நோக்கிச் சென்ற இரண்டு பெண் பரிசாரகர்கள் கதவைத் தட்டினர். கதவு பூட்டப்பட்டிருந்தது. விடுதியின் பின்புறமாக உள்ளே ஜன்னலைத் திறந்து பார்த்த போது அதிர்ந்து போனார்.மின்விசிறியில் பிணைக்கப்பட்ட கயிற்றில் தர்சிகா தொங்கிக் கொண்டிருந்தார்.

வேலணை வைத்தியசாலைப் பணியாளர்கள்,அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் ,கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இணைந்து உண்மையைச் சொல்ல வேண்டும். அதுவே இது போன்ற அவலம் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான உத்தரவாதமாக அமையும்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் கடமையின் நிமித்தம் வரும் தென்பகுதி பணியாளர்கள் பற்றி நாம் விழிப்பாக இருப்பது கட்டாயமானதாகும்.

குற்றம் புரியும் தென்பகுதி அரச



குடும்ப நல உத்தியோகத்தர் தர்சிகா

## கயிற்றில் தொங்கிய நிலையில் குடும்பநல உத்தியோகத்தர்

ணிடையே மீளக்குடியமர்வில் படும் இடர்பாடுகள். இவற்றின் மத்தியில் பேரினவாத சிந்தனையில் மூழ்கிப் போயுள்ள சிங்கள அதிகாரிகள் சிலரிடம் சீறிப்பாயும் இன வெறியும் எங்கள் இனத்திற்கு ஈனமாகிப் போயுள்ளமை வேதனையிலும் வேதனை. இந்தத் துன்பத்தின் ஓர் அத்தியாயமே வேலணை அரசினர் வைத்தியசாலையில் நடந்தேறியது.

தர்சிகா 27வயது நிறைந்த இளம் குடும்ப நல உத்தியோகத்தர். வேலணைத் துறையூரில் வெளிக்களப்பணியில் கடமையாற்றி வந்தார்.

வேலணை வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் கடமையாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் லீவில் செல்லும்

படி.... என்று கேட்டால் அது வினையாகி விடும் என்ற பயம் ஒரு புறம்.

அதேநேரம் ஒரு இளம் தமிழ்ப் பெண்ணை சிங்கள டாக்டர் ஒருவர் இப்படித் திட்டுகிறாரே என்ற வேதனை மறுபுறமாக அவர்கள் குழம்பிப் போயினர்.

பெண் பரிசாரர்கள் இருவரும் அலறி அடித்துக்கொண்டு ஓடிச் சென்று தர்சிகாவின் நிலையைக் கூற, பணியாளர்கள் எல்லோரும் ஓடிச் சென்று கதவை உடைத்து தர்சிகாவைப் பார்க்க, அவரின் உடல் மட்டுமே எஞ்சியிருந்தது.

இரவு முழுவதும் அழுது கொண்டிருந்த தர்சிகா காலையில் நம்பிக் கையோடு கையொப்பமிட்டவர் ஏன் அப்படி செய்ய வேண்டும்?

இந்த இனம்புரியாத கேள்விகளுக்கு மருத்துவத்துறையும் நீதித்துறையுமே பதில் காண வேண்டும்.

·ஓ!உயிரைக்காப்பாற்றவேண்டிய புனிதமான வைத்தியப்பணி பேயாட்

பணியாளர்களின் இடமாற்றத்திற்குரிய பிரதேசமாக யாழ்ப்பாணத்தை எவரும் கருதி விடாமல் இருப்பதற்கு அவதானிப்புக்கள் அவசியம்.

ஓ! இந்த மண்ணை விட்டு வெளியேறிய யாழ்ப்பாணத்தின் மருத்துவர்களே! எங்கள் உடலை வெட்டி பரிசோதனை செய்து படித்த மருத்துவ கலாநிதிகளே!

உங்கள் வருமானத் தேடலின் ஆசைக்கு தமிழினத்தின் சோதரியை ஆகுதியாக்கியுள்ளோம்.ஏற்றிடுக.

சிலவேளை யாழ்ப்பாண மண்ணை பார்ப்பதற்காக நீங்கள் கறுத்தக்கண்ணாடியும் அரைக்காற்சட்டையும் அணிந்து கொண்டு வேற்று நாட்டவர் போல வந்து



சக பணியாளருக்கு ஏற்பட்ட அவலத்தின் சோகத்தில்...

போது தர்சிகா பதில் கடமையைச் செய்ய வேண்டியதாயிற்று.

கடந்த 9 ஆம் திகதி இரவுக் கடமையில் தர்சிகா ஈடுபட்டிருந்தார்.

அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக சிங்களவரான டாக்டர் பிரியந்த செனவிரத்ன கடமையாற்றினார்.

கடந்த 9 ஆம் திகதி பதில் கடமையில் இருந்தபோது டாக்டர் செனவிரத்ன தர்சிகாவை திட்டத் தொடங்கினார். கையடக்கத் தொலைபேசியில் தர்சிகா உரையாடியதை சாட்டாக வைத்து, டாக்டர் செனவிரத்ன தர்சிகாவை அதட்டினார், மிரட்டினார். அடிப்பதற்குக் கை ஓங்கினார், கையடக்கத் தொலைபேசியைப் பறித்தெடுத்தார். டாக்டரின் இனம்புரியாத வெறித்தனத்தால் விடுதியில் இருந்த நோயாளிகள் பயத்தில் உறைந்து போயினர். இப்படி ஒரு டாக்டரா? இரவு 7 மணிக்கு தர்சிகாவை திட்டத்தொடங்கிய டாக்டர் செனவிரத்ன, நடுச்சாமம் 12 மணியாகியும் தனது திட்டலை விட்டபாடில்லை.

கைதடியைச் சொந்த இடமாகக் கொண்ட தர்சிகா தனது பொறுப்பதிகாரியின் பொறுப்பற்ற செயலால்

நான்கு மாதங்களுக்கு முன்னர் கட்டடப் பணியாளர் ஒருவருக்கு பிரஸ்தாப டாக்டர் அடித்த சம்பவம், அதனைத் தொடர்ந்து பணியில் புறக்கணிப்பு, பின்னர் உயர் அதிகாரிகளின் சமரசம் என்ற நினைப்புகள் டாக்டரை நெருங்குவதற்குத் தடை விதித்தன.

இதனால் கட்டடப் பணியாளர்கள் சம்பவத்தை அவதானித்துக்கொண்டே இருந்தனரே தவிர வேறு எதனையும் அவர்களால் செய்ய முடியாமல் போக, டாக்டரின் அதட்டலில் அதிர்ந்து போன தர்சிகா அழுது களைத்து மயங்கி விழுந்தார். சக பணியாளர்கள் அவருக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்தனர். சாமத்தோடு டாக்டரின் பேயாட்டம் தணிந்து உறங்கிக் கொண்டார்.

அந்த உறக்கம் கூட,அதிகாலையில் நடக்கப்போகும் அவரின் உருத்திர தாண்டவத்திற்கான ஓய்வாகவே இருந்தது.

### பத்தாம் திகதி மீண்டும்....

மயங்கிக் களைத்து விழித்த தர்சிகா மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து தனது கடமையை ஆரம்பித்தார். அவரின் முகத்தில் சோக ரேகைகளின் ஆக்கிரமிப்பு- அந்த வைத்திய




எதிர்ப்பு... டாக்டரைக் கைது செய்...

டம் ஆடி, ஆடுதா,கோழிதா, மனித உடலைத்தா என்று கதறியதில் அருமந்த தமிழ் இளம் மருத்துவ மாதுவை பலி கொடுக்க வேண்டியதாயிற்று. இந்த சோகம் தமிழர் வாழும் இடங்கள் எல்லாம் புயலாய் வீசுகின்றது. உண்மைகள் கண்டறியப்படவேண்டும். சிறுபான்மைத் தமிழர் என்றால் எங்களுக்கு அடிமை. நாங்கள் கேட்டால் அவர்கள் வந்தாகவேண்டும் என்ற பேரின வாத சிந்தனையை வெட்டி விழுத்த மருத்து சமூகம் முன்வர வேண்டும்.

**விதுரன்**

போகலாம். அவ்வாறு வரும் சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் பயிற்சி எடுத்த யாழ்.போதனா வைத்தியசாலையை ஒரு தடவை பாருங்கள். அது நன்றிக் கடனாக இருக்கும்.

அந்நேரத்திலாவது உங்கள் கறுத்தக் கண்ணாடிகளைக் கழற்றி விடுங்கள் ப்ளீஸ்.

## சமுர்த்தி அதிகார சபையை திணைக்களமாக மாற்றத் தீர்மானம்

(கொழும்பு)

சமுர்த்தி அதிகார சபையைத் திணைக்களமாக மாற்ற. அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மக்களின் வறுமையை ஒழிக்க பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் சமுர்த்தி திட்டத்தின் மூலமே பல மக்கள் நன்மை அடைந்தார்கள் எனவும் வறுமையை நாட்டில் இருந்து ஒழிக்கும் வேலைத் திட்டத்திற்கு ஜனாதிபதி தலைமைத்துவத்தை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் அதாவுட செல்வரட்ண தெரிவித்துள்ளார்.

(5)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்க நடவடிக்கை

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்வியின் கற்கைமொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும். இதன் மூலமே நாம் உலகை வெல்ல முடியும். எனவே பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு அதற்காக சர்வதேச தரத்திலான பயிற்சியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அண்மையில் பேராயர் இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திய போதே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எமது பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்பதற்கு சம்பிரதாயபூர்வமாக மாணவர்களிடையே சிறுபிரிவினருக்கே இடம் கிடைக்கின்றது.

பெரும்பாலானனோருக்கு அச்சந்தர்ப்பம் கிடைப்பதில்லை உதாரணமாக பாராம்பரிய சிங்கள வைத்தியம் கற்ற அதனை விரும்பும் மாணவர்களுக்கு இசட் ஸ்கோர் முறை காரணமாக பல்கலைக்கழகம் செல்ல முடிவதில்லை.

மூன்று முறை பல்கலைக்கழத்திற்கு தெரிவாக முயன்று குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களே ஆயுள்வேத கல்வியை கற்பதைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஏனையோர் மேலைத்தேய வைத்திய துறையை விரும்புகின்றனர்.

இதேபோன்று கலைபிரிவிலும் குறைந்தளவு மாணவர்களே இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். எனவே திறமையானவர்களை பல்கலைக்கழகத்திற்குள் இணைத்துக் கொள்வதற்கு திருத்தங்கள் கொண்டுவரப்படும். பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை குறைபாடு காரணமாக இதனால் அனுமதி கிடைத்தும் இடம் கிடைக்காத மாணவர்கள் பல இலட்சம் ரூபாய்களை செலவழித்து வெளி நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவனுக்கு இச்சந்தர்பம் கிடைப்பதில்லை. எனவே இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்லும் பணத்தைத் தடுதத்து குறைந்த செலவில் எமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் அதே வேளை அந்தப் பல்கலைக்கழகங்களில் இருந்து 15 வீதம் புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டு ஏனைய மாணவர்களுக்கு வழங்குவோம்.

உலகில் தாதிமாருக்கான கேள்வி அதிகரித்து அத்துறையில் அதிகளவு வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதனை இலக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதோடு வைத்தியர்களும் அதிகளவில் உருவாக்கப்படுவர். பல்கலைக்கழகங்களுக்குள் அனைத்துக் கருத்துக்களுக்கும் இடமளிக்க வேண்டும். ஆனால் இதற்கு ஜே.வி.பி. இடமளிப்பதில்லை. தமது கருத்தை பலாத்காரமாக திணிக்க முயல்கின்றனர் என்றார்.

(6)

# தமிழர்கள் மட்டும்பதிவுக்கு உட்படுத்தப்படும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்கள் மட்டும்பதிவுசெய்யப்படும்நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை பிரதேச தமிழர்கள்



மட்டும் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட நட வடிக்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தவேண்டுமெனவும் தமிழர்களை மட்டும் பதிவுக்கு உட்படுத்துவதன் மூலம் இன ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படக் கூடுமெனவும் மனோகணேசன் கடிதம் மூலமாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் தமிழர்களின் பிரச்சினைகள் இன்னமும் முடிவடையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளதுடன் சட்டத்தை மீறும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க பூரண உரிமை காணப்படுவதாக கூறியுள்ளார்.

நபர்கள் தொடர்பான பதிவுகளை புள்ளி விபரத் திணைக்களம் தொழில்சார் ரீதியில் நாகரிகமாக மேற்கொண்டிருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

(6)

# வடபகுதியை துறை ரீதியாக அபிவிருத்தி செய்வது குறித்து சர்வதேச நாடுகளுடன் பேச்சு

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியை துறைவாரியாக துரிதமாக அபிவிருத்தி செய்வது குறித்து பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்தார். இதற்காக அந்நாடுகளிடமிருந்து உதவிகளை பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை பாதுகாப்பு தரப்பினரால் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் சுமார் மூவாயிரம் பேருக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வவுனியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் டி.எம். ஜயரட்ன அங்கு இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பயங்காரவாதம் காரணமாக அழிவுற்றுள்ள வட பகுதியைத் துறைவாரியாக துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததோடு புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு வைத்திருந்த நிலையில் பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த பத்தாயிரம் பேருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன திறமையான செயல்திறன் மிக்க அவர்களில் மூவாயிரம் பேருக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் விரைவில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும் இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பிரதமர் கூறினார்.

அத்துடன் வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் முகாம்களில் எஞ்சியுள்ள சுமார் 40 ஆயிரம் பொது மக்களும் இவ் வருட முடிவுக்குள் மீள்குடியமர் தப்படுவர் என்றும் சுட்டிக்காட்டினார்.

(6)

## புலனாய்வுத்துறை அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு பிராந்திய பொலிஸ் நிலையங் களில் கடமையாற்றிய புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிராந்தியத்தைச் சேர்ந்த பத்துபொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றியவர்கள் இனிவரும் காலங்களில் சாதாரண கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல விடுதலைப்புலிச் சந்தேக நபர்களை கைது செய்த புலனாய்வு அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(6)

# நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில்3 வீதமாக இருந்த நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது 10 வீதமாக உயர்வடைந்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் நகரப் பகுதிகளில் இந்த எண்ணிக்கை 20 வீதமாக உயர்வடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சின் தொற்றுயோய்கள் அல்லாத நோய்கள் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பாலித கருணாசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மத்திய மாகாணத்தில் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் வீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(6)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

**இலங்கை வங்கிக் கிளைகளில் மீட்கப்படாத தங்கஅடகு நகைகளின் ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது**

ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டபடி யூலை 17ஆம் ,18ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அடகு நகை ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் யூலை 24ஆம், 25ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கைவங்கிக்கிளைகளில் 16.10.2009 இற்கு முன்னர் 6மாதங்களுக்கும் 16.04. 2009 இற்கு முன்னர் 12 மாதங்க ளுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2010 ஜுலை 24ஆம், 25ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு ) காலை 9.30 மணிக்கு |
| யாழ். 2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை (வல்வெட்டித்துறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

தொ.பேசி.இல. 021 222 3126
021 222 2735

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடமாகாணம்)
வடமாகாண காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C509)

# யாழ்ப்பாணக் கோட்ட மட்ட சைவநெறிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டசைவநெறிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாண வர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**நீதி நூல் மனனம்**

*தரம் -1*

ந.சுவீகரன் (யாழ்.மத்திய கல்லூரி), த.சாயகி (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), தே.கிருத்திகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*தரம் -2*

க.மதுமதி (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), நா.சந்தோஷ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கோ.சஞ்சய் ( யாழ்.மத்திய கல்லூரி), சு. சாம்பவி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

**பேச்சு**

*தரம் -3*

நா.மதுசன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), ல.லவன் (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), ம.கேண்சிகா (நாவாந்துறை றோ.க.வித்தி

*தரம் -4*

ச.குகாநந் (சென்ஜோண்ஸ் கல்லூரி), ர.நிதூசிகா (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.) ம.ஜானுஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

*தரம் -5*

வி.நிரோஷா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.சோபனா (சென்ஜோண் பொஸ்கோ வித்தி), வெ.சஜேந்திரன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி).

*தரம் -6*

கெ. கௌதமி (சுண்டிக்குளி கல்லூரி), பி. டுசாந் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), ஆ. தேனுஜா (வைத்தீஸ்வராக் கல்லூரி), க.கர்சிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),

*தரம் -7*

க.கௌசிகன் (யாழ்.மத்திய கல்லூரி), சி.சிவனுஜா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பு.கிருஷாந்தி(வண். நாவலர் ம.வித்தி.

*தரம் -8*

ச.கௌரிபாலன் (சென் ஜோண்ஸ் கல்லூரி), ஜெ.கிலோஜன் (வைத்தீஸ்வராக் கல்லூரி), சு.லௌசியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

*தரம் -9*

ப.கதிர்தர்சினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தே. சங்கீதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ம. குணசாயினி (கொழும்புத்துறை இந்து மகா வித்தி.)

*தரம் -10*

சூ.கோபிநாத்(யாழ்.மத்திய கல்லூரி),சா. நிரோஷா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), க.சௌமியா ( வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

*தரம் -11*

ம.மிதுன்பரிசித் (யாழ்.மத்திய கல்லூரி), கு.புவனலோஜினி (வைத்தீஸ்வராக் கல்லூரி), தி.கோஜியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**பண்ணிசை**

*தரம் -3*

சி.கஜீபனா (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.) ,சு.யதுசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கு.தனுஜன் (யாழ்.மத்திய கல்லூரி)

*தரம் -4*

க.சங்கவி (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), ந.கிருஷிகா (சுண்டிக்குளி மளிர் கல்லூரி), செ. சஞ்சுதன் (கொட்டடி நமசிவாய வித்தி.)

*தரம் -5*

இ.அபிசாதன் (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.),அ.சர்விகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சு.பானுஜன் (யாழ். மத்திய கல்லூரி).

*தரம் -6*

ர.கார்த்திகாயினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கு.பவித்திரா(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தெ.டெஜி (கொட்டடி நமசிவாய வித்தி

*தரம் -7*

த.அபிவர்னா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி),த.வைஷ்ணவி(கொட்டடி நமசிவாய வித்தி, செ.சுபகரி (கொழும்புத்துறை இ.ம. வித்தி

*தரம் -8*

ர.ஸகிஷ்னா ( வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), செ.மயூரிக்கா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கு.நர்மதா (கொட்டடி நமசிவாய வித்தி

*தரம் -9*

பா.அம்புஜன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), வி.சகானா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கு.மிதுலா (வேம்படி மகளிர்உயர்தரப் பாடசாலை)

*தரம் -10*

ச.சரண்யா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), அ.தனுஜா ( வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),சா.சரணியா (வைத்தீஸ்வராக் கல்லூரி.

*தரம் -11*

செ.சிவதாரணி (சென் மேரிஸ் வித்தி.), ப.சபிதா(வைத்தீஸ்வராக் கல்லூரி), சி. டிலுக்சன் (யாழ்.மத்திய கல்லூரி). (தொடரும்)

## போக்குவரத்து பொலிஸார் உசார் நிலையில்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் மூலைமுடுக்கெல்லாம் பொலிஸார் உசார் நிலையில் காணப்படுவதால், மோட்டார் வாகனத்தில் செல்வோர், தலைக்கவசங்களுடனேயே பயணம் செய்கின்றனர்.

வாகன நெருக்கடியான சகல வீதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களை ஒழுங்குபடுத்தி விபத்துக்களும் நெரிசல்களும் ஏற்படாத வண்ணம் பணியாற்றி வருவதை அவதானிக்க முடிகின்றது.(6-51)

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தில் தினமும் மாலை 6மணிமுதல் 7மணிவரை பெரியபுராணம் என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றி வந்த சி.வை. நித்தியானந்த சர்மா மற்றும் ஆலய சப்பறத் திருவிழா அன்று புல்லாங்குழல் இன்னிசைக் கச்சேரி நடத்திய நோர்வே சகோதரிகளான செல்வி மீரா திருச்செல்வம் மற்றும் தீபா திருச்செல்வம் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வலி. வடக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.அருணகிரி தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. குகனேயன், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.சிவயோகம்,மல்லாகம் மத்தி கிராம அலுவலர் இ.கங்காதரன், மல்லாகம் சுகாதாரப் பரிசோதகர் கே. அஜந்தன், வலி. வடக்கு முன்பள்ளி இணைப்பாளர் திருமதி தே. லில்லிராணி,முன்னாள் பாடசாலை ஆசிரியர் செல்வி சி.திருச்செல்வி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-9)

## சுனாமி எச்சரிக்கைக்கான ஒத்திகை செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள ஜே/390 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்புப் பயிற்சி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி சம்பந்தமாக குறித்த பிரிவு பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்றபடியால் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை என யாழ்.மாவட்ட மேலதிக அரசங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (6-4)

## புனித யாகப்பர் ஆலய திருவிழா

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 149 ஆவது வருடபூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 6மணிக்கு திருப்பலி முடிவடைந்ததும் பங்குத் தந்தை ஆர்.நேசராஜா அடிகளாரால் ஆலயக் கொடி ஏற்றி வைக்கப்பட வுள்ளது.

தொடர்ந்து 9 நாட்களுக்கு மாலை 5 மணிக்கு நவநாட்கள் நடைபெற்று 25 ஆம் திகதி திருநாள் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (6-39)

## தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் யூலை மாத வேதனப் பட்டியல் யாழ்.கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (6-4)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அதற்கான அனுமதிப் பத்திரம் மற்றும் நேர அட்டவணையை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் வி.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (6-4)





## விலங்குகளுக்கான கருத்தடை ஊசியேற்றல்

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகர சபையினரின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் விலங்குகளுக்கான நோய் தடுப்பூசி, விலங்குகளுக்கான கருத்தடை ஊசியேற்றல் இன்று காலை 9 மணிக்கு சங்கிலியன் வீதி, பண்டாரக்குளம் வீதி ஆகிய வீதிப் ப்குதிகளில் இலவசமாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.


வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசியும், கட்டாக்காலி நாய் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பெண் நாய்களுக்கான கருத்தடை ஊசியும் ஏற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-51)



கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏச்.ஆர். மித்திரபால நேற்று திருநெல்வேலி கால்நடை உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் அமைச்சர் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாகாணப் பணிப்பாளர் சிவநாதன், அமைச்சர் ஆகியோர் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

22. கீழுள்ள கோலத்தை இனங்கண்டு அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க






23. கீழுள்ள எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணைக் கொண்ட விடை எது?

88 → 64 → 49 → ?


1) 25  2) 36  3) 16

24. கீழே முதலில் உள்ள பாத்திரத்தின் தொகுதியை மேலிருந்து நோக்கும்போது தெரியும் அமைப்பு எதுவெனத் தெரிவு செய்க.





25. 


அருகே A , B, C, D ஆகிய நான்கு தரை ஓடுகள் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கோலத்தையே காண்கிறீர்கள். இந்த நான்கு தரை ஓடுகளையும் எடுத்து வேறு ஏதாவது ஒரு சீரான வடிவத்தில் வைத்தால் தோன்றும் கோலத்தை தெரிவு செய்க.





★ 26 ஆம் 27 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் இடைவெளிகளில் வரவேண்டிய எண்ணை மூன்று விடைகளில் இருந்தும் தெரிவு செய்க. (குறியீடுகளில் உள்ள கணிதச் செய்கைகளை அறிவதற்கு எதிரேயுள்ள கூட்டினை அவதானியுங்கள்)




26. 1) 5  2) 6  3) 7

27. 1) 2  2) 3  3) 4


★ கீழேயுள்ள விளக்கப்படத்தை அவதானித்து, 28 ஆம் 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.





28. அப்பிள் பழத்தை விரும்பி உண்ணும் பிள்ளைகள் எத்தனை பேர் உள்ளனர்?
1) 10 பேர்  2) 15 பேர்  3) 20 பேர்

29. மூன்று வகையான பழங்களையும் விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1) 3 பேர்  2) 4 பேர்  3) 5 பேர்

★ கீழுள்ள உருக்களின் நிரையை அவதானித்து 30, 31, 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.





30. மேலுள்ள நிரையில் அதிகமாக உள்ள உரு எது?




31.  இந்த உரு எத்தனை தடவைகள் வந்துள்ளது?
1) 2 தடவைகள்
2) 3 தடவைகள்
3) 4 தடவைகள்

32. ஒரே வகையான இரண்டு உருக்களுக்கு நடுவில் அமைந்துள்ள உரு எது?








★ மேலுள்ள படங்களையும் அவற்றுக்குரிய எழுத்துக்களையும் அவதானித்து, 33, 34, 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக.


33. சமையல் அறையுடன் தொடர்புடைய பொருட்களை மட்டும் குறிக்கும் விடை எது?
1) IGB
2) BGD
3) GIA

34. ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே பயன்படுத்தக் கூடிய பொருட்களைக் கொண்ட விடை எது?
1) ADIE
2) CDHI
3) FCGD

35. ADH ஆகிய பொருட்களுடன் தொடர்புடைய மிகச் சரியான சொல் பின்வருவனற்றுள் எது?
1) ஆசிரியர்
2) அதிபர்
3) மாணவன்

36. 


இத்தராசின் இரு தட்டுக்களினதும் பொருட்களின் நிறை சமனாகும். எனவே, கீழே காட்டப்பட்டுள்ள தராசுகளில் சமம் என்று கூற முடியாத தராசு எது?




★ 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

37. சராசரி எனும் சொல்லை **MSMR** என எழுதலாம் எனின், பரபரப்பு எனும் சொல்லை எழுதிய முறை எதுவாக இருக்கும்?
1) BCBCBB
2) BCBCKE
3) KEKEBK

38. அதிபதி என்பது  எனின், திருமுருகன் என்பது-





39.

| | | | | |
|---|---|---|---|---|
| ★ | ★ | ★ | ★ | = 12 |
| △ | ★ | △ | ★ | = 10 |

இங்கு தரப்பட்டுள்ள குறியீட்டுப் பிரசினத்தில் △ இக்குறியீடு ஒன்றின் பெறுமதியை எழுதுக.

(......................)

40. 


இங்கு தரப்பட்டுள்ள குறியீட்டுப் பிரசினத்தில் ...?.... இக்குறியீடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எண் பெறுமதி யாது?

(......................)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:-எஸ்.எ.சந்திரபவன்



## மாதிரி பரீட்சை –II
## வினாத்தாள் –I

நேரம்- 45 நிமிடம்



♦ 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு மூன்று விடைகள் தரப்பட்டுள்ள. இவற்றுள் சரியான விடையின் கீழ் கோடிடுக.

★ 1 ஆம் 2 ஆம் வினாக்களில் முதலில் உள்ள 3 சொற்களுடனும் மிகவும் பொருந்தும் படத்தினைத் தெரிவு செய்க.

01 காற்று, வியர்வை, வீடு

 1)
 2)
 3)

02. புராதனம், பயணம், எளிமை

 1)
 2)
 3)

03 ஆம் 04 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தினால் ஒரு நிகழ்ச்சி தொடர்பான வாக்கியம் கிடைக்கும். அவ்வாறு ஒழுங்குபடுத்திய விடையைத் தெரிவு செய்க.

03 1.இந்திய அணி | 3. போட்டியில் | 5. நேற்று | 2. வெற்றிபெற்றது | 4. நடைபெற்ற

1) 3, 5, 2, 4, 1   2) 4, 1, 5, 2, 3   3) 5, 4, 3, 1, 2

04. 1.எமது | 3. நாம் | 5. சூழலை | 2. வைத்திருப்போம் | 4. சுத்தமாக

1) 3, 5, 2, 4, 1   2) 3, 1, 5, 4, 2   3) 5, 1, 3, 4, 2

★ கீழுள்ள இரு பாடல்பகுதிகளையும் வாசித்து 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா

பாதிப் பழம் உன்னிடம்
மீதிப் பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத்
தின்னலாம்.

05. குண்டுப் பழம் என்பதன் மூலம் கருதப்படும் பழம் யாது?
1) பூசணிப்பழம்
2) கொய்யாப்பழம்
3) பலாப்பழம்

07. பழத்தில் ஒரு பாதி இருப்பது யாரிடம்
1) அணிலிடம்
2) கிளியிடம்
3) வெளவாலிடம்

08. எலியொன்றை பூனை பிடித்துத் துன்பப்படுத்தியது. அந்தப் பூனையை ஓர் நாய் பிடித்து வருத்தியது. அப்போது பூனை அறிந்து கொண்ட உண்மை யாதாக இருக்கும்?
1) ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
2) அழுத பிள்ளை பால் குடிக்கும்
3) தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்

09 மகேசனுக்கு வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்று நெடுநாள் ஆசை. ஆனால் இப்போது இருக்கும் அரசாங்க உத்தியோகத்திலும் முன்னேற வேண்டும் என்றும் ஆசை. மகேசனின் நிலையைக் கூறும் தொடர்.
1) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
2) திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
3) பேராசை பெருநட்டம்

10. நண்பர்களான சுண்டெலிக்கும் யானைக்கும் இடையில் ஒருநாள் சண்டை ஏற்பட்டது. அப்போது சுண்டெலியை யானை தண்டவாளத்தில் தூக்கிப் போடவே, வேகமாக வந்த ரயிலில் நசியுண்டு யானை இறந்து விட்டது.
மேலுள்ள நிகழ்ச்சியில் ஓர் கருத்துப் பிழையாக உள்ளது. கருத்துப் பிழையாகுவதற்குக் காரணம் யாதாக இருக்கும்?
1) ரயில் மோதி யானை சாகாது
2) சுண்டெலியால் யானையைத் தள்ளி விட இயலாது
3) சுண்டெலிதான் ரயிலில் நசியுண்டு இறந்திருக்கும்.

11. 'ஒற்றுமையுடன் இருந்தால் பலமாக இருக்க முடியும்' என்பதை விளக்கும் பழமொழி யாது?
1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
3) எறும்பூரக் கற்குழியும்

★ கீழுள்ள பந்தியை வாசித்து 12 ஆம் 13 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

பிரதீப் பரீட்சையில் சித்தியடையும் எண்ணத்துடன் முயற்சியுடன் படித்து வந்தான். அவன் அல்லும் பகலும் கண்விழித்து உணவும் உறக்கமும் மறந்து படிப்பிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்தான். பரீட்சையும் நடந்து முடிந்து பெறுபேறுகளும் மிக விரைவில் வந்து சேர்ந்தன. ஆவலோடு முடிவுகளை அறிவதற்காக பாடசாலை சென்ற பிரதீப்பிற்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது......!

12. பிரதீப் தொடர்பாக கூறப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்று எது?
1) பிரதீப் வீண் முயற்சி எடுத்துள்ளான்.
2) அவனது முயற்சி வீண் போகவில்லை
3) அவன் நினைத்தது கைகூடவில்லை

13. பாடசாலையில் அவனுக்காகக் காத்திருந்த இன்ப அதிர்ச்சி யாதாக இருக்கும்?
1) அவன் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதாகும்
2) அவன் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான் என்பதாகும்
3) அவன் முதல் மாணவனாகச் சித்தியடைந்துள்ளான் என்பதாகும்.

★ ஒரு பிள்ளை கடைக்குச் சென்று வாங்கிய பொருட்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றை வாசித்து விடை தருக.

➢ பந்து வாங்கியது பேனா வாங்குவதற்கு முன்னராகும்
➢ பந்து வாங்குவதற்கு முன்பு பட்டம் வாங்கப்பட்டது.
➢ பட்டம் வாங்கிய பின்னரே பேனா வாங்கப்பட்டது.

14. அந்தப் பிள்ளை முதன் முதலில் வாங்கிய பொருள் யாது?
1) பட்டம்   2) பந்து   3) பேனா

15. மேலுள்ள பொருட்களில் இறுதியாக வாங்கிய பொருள் யாது?
1) பேனா   2) பட்டம்   3) பந்து

16. சாதனா இவ்வருடம் (2009) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகின்றாள். சாதனாவின் அண்ணா சானுஜன் அவளுக்கு 3 வயது மூத்தவன். எனவே, சானுஜன் இப்பரீட்சை எழுதிய ஆண்டு யாதாக இருக்கும்?
1) 2005 இல்   2) 2006 இல்   3) 2007 இல்

17. கீழே ஒழுங்குமுறையில் அமைந்த விடை யாது?
1) பாடசாலை செல்லல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல், பாடம் படித்தல், வீடு திரும்புதல்,
2) பாடசாலை செல்லல், உடற்பயிற்சி செய்தல், பாடம் படித்தல், விளையாடுதல், வீடு திரும்புதல்,
3) பாடசாலை செல்லல், பாடம் படித்தல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் வீடு திரும்புதல்,

18. பொருட்களின் பருமன் அடிப்படையில் ஒழுங்குமுறையில் அமைந்த விடை எது?
1) தேசிக்காய், பப்பாசிக்காய் மாங்காய், பலாக்காய்
2) தேசிக்காய், மாங்காய், பலாக்காய், பப்பாசிக்காய்,
3) தேசிக்காய், மாங்காய், பப்பாசிக்காய், பலாக்காய்

19. ஏனைய சொற்களோடு தொடர்பற்ற ஒருசொல் இடம்பெறும் விடை எது?
1) சீப்பு, பவுடர், பொட்டு, லிப்டிக்
2) திகதி, மாதம், பாதம், ஆண்டு
3) கைபிடி, ஆசனம், சில்லு, கால்மிதி

19. ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சொற்களைக் கொண்ட விடை எது?
1) விமானி, விமானம், தண்டவாளம், பயணம்
2) தரை , வீதி, பயணம் , ஆகாயம்
3) கடல் , கப்பல், பயணி , பயணம்

★ இவ்வருடம் இல்ல விளையாட்டுப் போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட விளையாட்டுக்களில் பங்குபற்றிய சில மாணவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 20 ஆம் 21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| 100 மீற்றர் ஓட்டம் | அஞ்சல் ஓட்டம் | உயரம் பாய்தல் | குண்டு எறிதல் |
|---|---|---|---|
| சிவகுமார் | மோகனதாஸ் | கீர்த்தி | பரணீதரன் |
| பரணீதரன் | கருணாகரன் | பரமேஸ்வரன் | யோகேஸ் |
| ஆனந்தன் | பரணீதரன் | சிவபாலன் | கீர்த்தி |
| கீர்த்தி | சிவபாலன் | கருணாகரன் | சிவபாலன் |

20. ஏதாவது 3 விளையாட்டுக்களில் மட்டும் பங்குபற்றிய வீரர்களைக் கொண்ட விடை யாது?
1) கீர்த்தி - சிவபாலன்
2) பரணீதரன் - கீர்த்தி
3) கருணாகரன் - முரளிதரன்

21. ஒரு விளையாட்டில் மட்டும் பங்குபற்றிய வீரர்களின் பெயர்களைக் கொண்ட விடை எது?
1) பரமேஸ்வரன் , பரணீதரன், மோகனதாஸ்
2) யோகேஸ், ஆனந்தன், சிவபாலன்
3) மோகனதாஸ், ஆனந்தன், பரமேஸ்வரன்

# வடக்கு- கிழக்கை இணைக்கும் பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு , கிழக்கு மாகாணங் களை மீண்டும் இணைப் பது என்ற பேச் சுக்கே இட



மில்லை. அவ்வாறான தீர்மானம் ஒன்றுக்கு அரசாங்கம் ஒரு போதும் செல்லாது.நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஒரு போதும் மீற முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வடக்கு , கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதுடன் உரிய கால எல்லைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணுமாறும் வலியுறுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் கோரியுள்ளமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்கள் அண்மையில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச்சு நடத்தினர்.

மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினர். இதன் போது வடக்கு கிழக்கு விவகாரம் அரசியல் தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் இது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

எனினும் வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைக்கும் கோரிக்கையை ஒரு போதும் ஏற்க முடியாது.காரணம் நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு அப்பால் செல்ல முடியாது.

மேலும் வடக்கு -கிழக்கு மாகாணங்களை இணைப்பு என்பது தற்போதைய நிலைமையில் ஒரு விவகாரமே அல்ல. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தியாவிடம் இவ்வாறான கோரிக்கையை விடுத்தாலும் இந் தியா ஒருபோதும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்காது.

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

எனவே இவ்வாறான கோரிக்கையை இந்தியா இலங்கையிடம் விடுக்காது என்பதுடன் அழுத்தத்தையும் பிரயோகிக்காது என்று எங்களுக்கு தெரியும் என்று தெரிவித்தார். (6)

# பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு தேசிய பாடசாலைகளில் மீட்டல் வகுப்புக்கள் கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வசதி குறைந்த பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தேசிய பாடசாலைகளில் மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களை பரீட்சைக்கு தயார் படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பிரதி சனிக்கிழமைகளில் இந்த மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படு கிறது.

சகல தேசிய பாடசாலைகளும் இந்த மீட்டல் வகுப்புக்களில் கலந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைத் திணைக்களம் மாதிரி வினாத்தாள்களை அச்சிட்டு வெளியிடும் எனவும் இதன் அடிப்படையில் மீட்டல் வகுப்புக்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# சர்வதேச நீதிமன்றில் ஒருவரையேனும் ஆஜர் செய்ய இடமளிக்கமாட்டேன்

## ஜனாதிபதி சூளுரை

ஒரு படைவீரரையேனும் சர்வதேச நீதிமன்றில் ஆஜர் செய்ய இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜே.என்.பி கட்சியினருக்கு உறுதியளித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த வருடத்தில் மனிதாபிமான மீட்புப் பணிகளில் ஈடுபட்ட எந்தவொரு படைவீரரும் சர்வதேச நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் அரசாங்கம் படைவீரர்களை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய நாடுகளின் கட்டளைகளுக்கு அடிபணியாது யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் உறுதிமொழியை ஏற்றுக் கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச தனது உண்ணா விரதப் போராட்டத்தை கைவிட்டதாக ஜே.என்.பி. கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.(ச-5)

# 13.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1174 - ஸ்கொட்லாந்தின் முதலாம் வில்லியம் இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றியின் படையினரால் கைப்பற்றப்பட்டான்.
- 1643 - இங்கிலாந்து உள்நாட்டுப் போர் : இங்கிலாந்தில் ஹென்றி வில்மட் பிரபுவின் முடியாட்சி சார்புப் படைகள் சேர் வில்லியம் வோலர் தலைமையிலான நாடாளுமன்ற சார்புப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1793 - பிரெஞ்சு எழுத்தாளரும் புரட்சிவாதியுமான ஜோன் போல்மராட் அவரது குளியல் அறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.
- 1844 - இலங்கையில் பொலிஸ் நீதிமன்றங்கள் (police courts) அமைக்கப்பட்டன.
- 1869 - இந்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.
- 1908 - லண்டனில் இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில் முதன் முதலாகப் பெண்கள் பங்குபற்றினர்.
- 1878 - பெர்லின் உடன்படிக்கை சேர்பியா மொண்டெனேகுரோ ருமேனியா ஆகிய நாடுகள் ஒட்டோமான் பேரரசில் இருந்து முழுவதுமாக விடுதலை பெற்றன.
- 1923 - லாஸ் ஏஞ்சலீசில் ஹாலிவுட்டின் மேல் உள்ள மலையில் "ஹாலிவுட் குறியீடு" அதிகார பூர்வமாக எழுதப்பட்டது. ஆரம்பத்தில் இது "ஹாலிவுட்லாந்து " என எழுதப்பட்டாலும் பின்னர் 1949 இல் தற்போதைய பெயருக்கு மாற்றப்பட்டது.
- 1930 - முதலாவது உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டிகள் உருகுவாயில் ஆரம்பமாயின. லூசியென் லோரென்ட் பிரான்சுக்காக மெக்சிகோவுக்கு எதிராக முதலாவது கோலைப் போட்டார்.
- 1931 - காஷ்மீர் ஸ்ரீநகரில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 75 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப்போர்: மொண்டெனேகுரோ மக்கள் அச்சு நாடுகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- 1971 - மொரோக்கோவில் தோல்வியடைந்த இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட பத்து இராணுவத்தினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1997 - சே குவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபாவுக்குக் கொண்டுவரப்பட்டன.
- 2001 - சீனாவின் பீஜிங் நகரம் 2008 க்கான ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்குத் தகுதி பெற்றது.
- 2005 - பாகிஸ்தானில் கோட்கி என்ற இடத்தில் மூன்று தொடருந்துகள் மோதியதில் 150 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.


### பிறப்புகள்


- 1841 - ஒட்டோ வாக்னர் ஆஸ்திரியக் கட்டிடக் கலைஞர்.(இ.1918)
- 1934 - வோல் சொயிங்கா நோபல் பரிசு பெற்ற நைஜீரிய எழுத்தாளர்.
- 1953 - வைரமுத்து தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர் கவிஞர்

### இறப்பு

- 1974 - பட்றிக் பிளாக்கெட் நோபல் பரிசு பெற்றவர் (பி.1891)

## 1989-இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.





# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

**தரம்-13** **முன்னோடிப் பரீட்சை** **ஆனி 2010**

### கணக்கீடு-II-I நேரம் : 1 மணி

10.சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் மீதிகொண்டுவரும் தொகையில் ஏற்படுத்தப்படும் மாற்றம் அழைக்கப்படுவது,
1.பொருண்மையும் ஒன்றுதிரட்டலும்
2.கணக்கீட்டுக் கொள்கை மாற்றம்
3.நியாயமான முன்னிலைப்படுத்தல்
4.கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றம்
5.கணக்கீட்டு தவறு

11. பொருளாதார கட்டளை அளவினை மையமாகக் கொண்ட பின்வரும் கூற்றுக்களில் தவறானதைத் தெரிவு செய்க.
1.பொருளாதாரக் கட்டளை அளவில் கட்டளை இடும் கிரயமும், பராமரிப்பு கிரயமும் சமமாகும்.
2.இனங்காணப்பட்ட சிக்கன கட்டளை அளவிலும் அதிகமான அளவுகளுக் கும் கட்டளை இடப்படுமாயின் பாதுகாப்புக் கிரயம் அதிகமாகும்.
3.இனங்காணப்பட்ட சிக்கனக் கட்டளை அளவிலும் குறைவாக கட்டளை இடப்படுமாயின கட்டளை இடும் கிரயம் குறைவாக அமையும்.
4.கட்டளையொன்றில் உள்ளடங்கும் அலகுகள் குறைவாக காணப்படுமாயின் மொத்தக் கட்டளைக் கிரயம் அதிகமானதாகும்.
5.கட்டளை இடும் கிரயம் அதிகரித்துச் செல்லுமாயின் பாதுகாப்புக் கிரயம் குறைவடைந்து செல்லும்.

12. இருப்பு விலையிடலில் எளிய சராசரி விலையிடல் முறை தொடர்பான மிகச் சரியான கூற்றாக அமைவது?
1.இலங்கைக் கணக்கீட்டு நியமம் 05 இனால் சிபாரிசு செய்யப்பட்ட ஒரு முறையாகும்.
2.விலை அதிகரித்து செல்லும் பொருட்களுக்கு விலையிடுவதற்குப் பொருத் தமான முறையாகும்.
3.இறுதியிருப்பை நடைமுறைச் சந்தைவிலையில் பிரதிபலிப்பதாக அமையும்.
4.உண்மை விநியோக விலையிடல் முறையாக அமையும்
5.பொருள் எண்ணிக்கை,மொத்தப் பெறுமதி என்பன விநியோகத்தின் போது கருத்திற் கொள்ளப்படும்.

13. பின்வருவனவற்றுள் தொழிலாளருக்கான கூலியும் சம்பளமும், கழிப்பான (Recovry) அமையாதது;
1.ஊழியர் சேமலாப நிதி
2.ஊழியர் நம்பிக்கை நிதி
3.ஊழியர் கடனுக்கான அறவீடு
4.ஊழியர் சம்பள முற்பணம்
5.உழைக்கும் போதே செலுத்தும் வரி

15.நிறுவனமொன்றின் குறித்த கணக்காண்டில் ஊழியருக்கான சம்பளமும், கூலியும் தொடர்பான தரவுகள்.
செலுத்திய சம்பளமும் கூலியும் (தேறியது) ரூபா 586,000
ஊழியர் கடனுக்கான வருடாந்த வசூலிப்பு ரூபா 150,000
ஊழியர் 8% சதவீதம்
தொழிற்தகுனர்12% சதவீதம்

பின்வரும் அட்டவணையில் மிகச் சரியான தொகுதி

| இலாபநட்ட கணக்கில் பிரதிபலிக்கும் | | ஊழியர் சேமலாபநிதியம் |
|---|---|---|
| சம்பளமும் கூலியும் | EPF செலவு | |
| 1.ரூபா 800,000 | ரூபா 96,000 | ரூபா 160,000 |
| 2.ரூபா 586,000 | ரூபா 70,000 | ரூபா 117,200 |
| 3.ரூபா 736,000 | ரூபா 88,320 | ரூபா 147,200 |
| 4.ரூபா 736,000 | ரூபா 58,880 | ரூபா 147,200 |
| 5.ரூபா 800,000 | ரூபா,64,000 | ரூபா 160,000 |

**வினா இலக்கம் 15,16 என்பவற்றுக்கு விடையளிக்கக் கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

உற்பத்தி நிறுவனமென்றின் 10ஆயிரம் அலகுகளை பூர்த்தி செய்வது தொடர்பாக திரட்டப்பட்ட தரவுகள்.

| | |
|---|---|
| பாதிடப்பட்ட நேர்மூலப் பொருட் கிரயம் | ரூபா 570,000 |
| பாதிடப்பட்ட நேர் உழைப்பு சரிம கிரயம் | ரூபா 230,000 |
| பாதிடப்பட்ட நேரில் மூலப்பொருள் கிரயம் | ரூபா 158,000 |
| பாதிடப்பட்ட பிற ஆலை மேந்தலைக் கிரயம் | ரூபா 122,000 |

எதிர்பார்க்கும் இலாபம் விற்பனையில் 20%சதவீதம்

15.நிறுவனம் முதற்கிரயத்தில் வீதாசாரமாக மேந்தலைகளை உள்ளடக்குமா யின், பூர்த்தி அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயமாக அமைவது,
1.ரூபா 10.80
2.ரூபா 108. 00
3.ரூபா 180
4. ரூபா 18
5. ரூபா 200

16. அலகொன்றின் விற்பனை விலையாக அமைவது?
1. ரூபா 200.00
2. ரூபா 225.00
3.ரூபா 216.00
4.ரூபா 129.60
5. ரூபா 135.00

**வினா இலக்கம் 17,18 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

| விபரம் | 2008 ஆண்டு | 2009 ஆண்டு |
|---|---|---|
| விற்பனை வருமானம் ரூபா (மில்லியன்) களில் | 2.7 | 4.2 |
| தேறிய இலபாம் | 0.4 | 0.9 |

17.ஆண்டொன்றிற்கான நிலையான செலவாக அமைவது,
1.ரூபா 300,000
2.ரூபா 500,000
3.ரூபா 700,000
4.ரூபா 750,000
5.ரூபா 840,000

18.ஒரு மில்லியன் இலாபத்தை அநுபவிக்க மேற்கொள்ள வேண்டிய விற்பனை வருமானம்,
1.ரூபா- 2 மில்லியன்
2.ரூபா 3 மில்லியன்
3.ரூபா 4 மில்லியன்
4.ரூபா 4.2 மில்லியன்
5.ரூபா 4.5.மில்லியன்

19.வினா இலக்கம் 19,20 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக.

இயந்திர சாதனத்தின் கொள்விலை ரூபா 6 மில்லியன்
மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 5 ஆண்டுகள்
எஞ்சிய பெறுமதி இல்லை.
வருடமொன்றுக்கு எதிர்பார்க்கும் சராசரி தேறிய இலாபம் ரூபா 800,000 (பெறுமாத்தேய்வு தாக்கல் செய்த பின்) பெறுமானதேய்வு நேர்கோட்டு முறையில் தாக்கல் செய்யப்படும் 15% சதவீத கழிவுக்காரணியில் 05 வருடங்களுக்கான திரட்டிய பெறுமானம் 3.353ஆகும்.

19.முதலீடு மீளளிப்பு காலமாக (Payback Period)ஆக அமைவது,
1. 7.5 ஆண்டுகள்
2. 3 ஆண்டுகள்
3. 3.5 ஆண்டுகள்
4. 5 ஆண்டுகள்
5. 6ஆண்டுகள்

20.இயந்திரத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதியாக அமைவது,
1.ரூபா 245,000 சாதகம்
2.ரூபா 5746,000 சாதகம்
3.ரூபா 6254,000 சாதகம்
4.ரூபா 706,000 பாதகம்
5.ரூபா 706,000 சாதகம்

வினா இலக்கம் 21 தொடக்கம் 35 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.

21.இலங்கை கணகீட்டு நியமம் 10 இன் படி கணக்கீட்டு மதிப்பீடுகள் (Accounting Estimaes) என்பதனை வரையறுக்க.

**வினா இலக்கம் 22,23 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக.**

கம்பனியொன்றின் 2010 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பகிரப்படாத இலாபம் ரூபா 968,000.

2010 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சில தரவுகள்.
-செலுத்திய வருமானம் வரி (08/09)இற்கு ரூபா 54,000
-செலுத்திய வருமான வரி (09/10)இற்கு ரூபா 168,000
-செலுத்திய இடைக்காலப் பங்குலாபம்-சாதாரணபங்கு 130,000
-முன்னுரிமைப் பங்கு 120,000

2009 மார்ச் 31 இல் காணப்பட்ட மீதிகள் சில
-பகிரப்படாத இலாபம் ரூபா 345,000
-வருமானவரி ஏற்பாடு (4 காம் காலாண்டு) (2008/09)45,000

2010 மார்ச் 31 இல் இயக்குனர் பிரேரணைகள் வருமாறு,
-பொது ஒதுக்கத்திட்கு ரூபா 100,000 மாற்றுதல்
-முன்னுரிமை பங்குதாரருக்கு ஆண்டிறுதிப் பங்கிலாபமாக ரூபா 180,000 ஐயும், சாதாரண பங்குதாரருக்கு ரூபா 180,000 ஐயும் பங்கிலாபமாக பிர கடனப்படுத்தல்.
-வருமான வரி ஏற்பாடு (2009/10)இன் 4 காம் காலாண்டுக்கு ரூபா 43,000 ஏற்பாடு செய்தல்.

22. 2010 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு கம்பனி தாக்கல் செய்த வருமானவரித் தொகை யாது?

23. 2010 மார்ச் 31 இல் கம்பனி உழைத்த வரிக்கு முன் தேறிய இலாபம் யாது?

24.பின்வரும் கணக்கீட்டு விகிதங்களுக்கான சூத்திரங்களை தருக.
1.நடைமுறை விகிதம் :- ..............................................
2.இணைப்பு விகிதம் :- ..............................................

25. இலங்கை கணக்கீட்டு நியமம் -09இறகிணங்க காசும் காசுக்கு சமமானவையும் (Cash &Cash Equivalent) என்ற பதத்தை வரையறுக்க.

26. ஐந்தொகை தினத்திற்குப் பிந்திய நிகழ்வுகளில் "சீராக்கப்படாத நிகழ்வுகள்" என்பதனை வரையறுத்துக்கூறுக.

**வினா இலக்கம் 27,28 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

இருப்பு இலக்கம் 510 A இன் தரவுகள்.
வருடாந்தக் கேள்வி 6000அலகுகள்
கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கான கிரயம் ரூபா 600
அலகொன்றின் கொள்விலை ரூபா 25
பாதுகாப்புக் கிரயம் இருப்பின் பெறுமதியில் 20% சதவீதம்

27.சிக்கன் கட்டளை கணியத்தைத் துணிக.

28.வருடாந்த கட்டளைக் கிரயம் யாது?

29. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-18 இற்கிணங்கஆதனம், பொறி, உபகரணம் தொடர்பான மீள்விலை மதித்தல் தொடர்பான வெளிப்படுத்தல் 02 ஐ குறிப்பிடுக

30.இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36 இற்கிணங்க ஏற்பாடுகள், ஒதுக்கங்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் 02 ஐக் குறிப்பிடுக.

| ஏற்பாடுகள் | ஒதுக்கங்கள் |
|---|---|
| 1.............................................. | .............................................. |
| 2.............................................. | .............................................. |

31. இயந்திர மணித்தியால அடிப்படையில் மேந்தலை உள்ளடக்கல் விகிதத்திற்கான சமன்பாட்டினைத் தருக.

32.நிறுவனமொன்றினால் தெரிவு செய்யப்பட்டு பின்பற்றுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றியமைக்கக்கூடிய 2 சந்தர்ப்பங்களைத் தருக.

**வினா இலக்கம் 33,34 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

தொழிற்சாலையொன்றில் ஊழியர் அமரதாஸ வேலை செய்த மணித்தியால விபரங்கள் வருமாறு,

பூர்த்தி செய்த மரத்திலான கதிரைகள் 18
கதிரையொன்றுக்கு அனுமதித்த நேரம் 03 மணித்தியாலங்கள்
நாளொன்றுக்கான வேலை நேரம் (ஞாயிறு தவிர)8 மணித்தியாலங்கள்
வேலை செய்த நாட்கள் 6 மணித்தியாலங்கள்
மணித்தியாலக் கூலி ரூபா 100
ஹெல்சி வேயர் முறையில் சேமிக்கப்படும் மணித்தியாலங்களுக்கு மிகையூதியக் கூலி வழங்கப்படும்.

33.அமரதாஸவிற்குரிய வாராந்த சாதாரண கூலி யாது?

34.அமரதாஸவிற்குரிய மொத்தக் கூலி யாது?

**கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்தி வினா இலக்கம் 35,36,என்பவற்றுக்கு விடை தருக.**

நேர் ஊழிய மணித்தியாலமொன்றுக்கான மேந்தலை உள்ளடக்கல் விகிதம் ரூபா 75
திட்டமிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் 200
திட்டமிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் 150
அலகொன்றுக்கான மேந்தலை நேர் ஊழிய மணித்தியாலய அடிப்படையில் உள்ளடக்கி உற்பத்தி செய்த அலகு ஒன்றை உருவாக்க ஊழியத் தொழிநுட்பத்தை அல்லது இயந்திர தொழிநுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.
-ஊழியர் தொழிநுட்பமாயின் -1 1/2 மணித்தியாலங்கள்
-இயந்திர தொழிநுட்பமாயின் -1/2 மணித்தியாலம் என மதிப்பிடப்பட்டது.

35. இயந்திர மணித்தியாலமொன்றுக்கான மேந்தலை உள்ளடக்கம் விகிதம் யாது?

36.உற்பத்திக் கிரயத்தை குறைப்பதற்கு நீர் எதனை ஆதரிப்பீர்?

37. உற்பத்தி முயற்சியொன்றின் தரவுகள் வருமாறு,
விற்பனை வருமானம் ரூபா 6000,000
பங்களிப்பு வீதம் 40 %
தேறிய இலாபம் 1000,000
நிறுவனத்தின் விற்பனை ரூபா 8000,000 ஆயின் தேறிய இலாபம் யாது?


38. எல்லைக் கிரயக் கணக்கீட்டின் எல்லைகள் 02 ஐக் குறிப்பிடுக.

39.நீண்டகால செயற்திட்டங்களில் முதலீடு செய்வது தொடர்பாக நிறுவனத்திற்கு வழிகாட்டக்கூடிய தொழிநுட்பங்கள் 02ஐக் குறிப்பிடுக.

1.மரபுரீதியானவை :-..............................................
2.நவீன தொழிநுட்பம்:-..............................................

40.செயற்திட்டங்களுக்கான முதலீட்டுக் கருவியான பணத்திற்கு காலபெறுமதி உண்டு என்பதற்கு 02 காரணங்கள் தருக.

# எதற்கும் விலை போகாத தலைவர் அமிர்தலிங்கம்



**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
(சிரேஷ்ட துணைத்தலைவர்,
இலங்கைத் தமிழரசுக்கட்சி)

### இலங்கை- இந்திய ஒப்பந்தம்

1987 இல் உருவாகிய இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். முன்னர் இலங்கை அரசுக்குள்ளே தான் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமோ எனில் இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக அமைந்தது மட்டுமன்றி இது ஒரு சர்வதேச ஒப்பந்தமாக இருப்பதால் இலங்கை அரசு இதனை மீறிச்செல்வது மிகமிகக் கடினமாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் முதல் முதலாக வடகிழக்குப் பிரதேசங்கள் வரலாற்று ரீதியாகத் தமிழ்மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை இவ்வொப்பந்தம் அங்கீகரித்தது. இடைக்கால அரசில் மூத்தோரான தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் இளையோரான போராளிக்குழுவினரும் இணைந்து செயற்பட ஒழுங்குகள் காணப்பட்டன. இவ்வொப்பந்தத்தின் பின்னணியைத் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் 'செல்வா ஈட்டிய செல்வம்' என்ற நூலில் மிகவும் கச்சிதமாக விளக்கியுள்ளார். இவ்வொப்பந்தத்தின் செயலாக்கத்திற் போராளிக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும், இந்திய அமைதிப் படையினரின் வருகையும் அதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் இதனைச் செயலிழக்கச் செய்தன. அத்துடன் இந்தியப் பிரதமரான ரஜீவ் காந்தியின் படுகொலையும் இந்தியாவை எமது நலனில் அக்கறை காட்டாத விரோதியாக்கி விட்டது.



### இளைஞர் கையில் தமிழ்த் தலைமை

இக்காலத்தில் தமிழ் அரசியல் தலைமை மிதவாத அரசியல் தலைவர்கள் கைகளை விட்டு மெல்ல மெல்ல ஆயுதம் தாங்கிய போராளிகளின் கைக்குச் செல்லத்தொடங்கியது. துரதிஷ்ட வசமாக மூத்தோரிடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்று எமது இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்க இருந்த போராளிகளால் இதனைப் பக்குவமாக ஒப்பேற்றி வைக்க முடியவில்லை.

இயக்கத்தலைவர்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையின்மை, மூத்த தலைவர்களைப் புறந்தள்ளியமை, தீர்க்கதரிசனமின்மை, உள்ளக, வெளியுலகக் களநிலைகள் பற்றிய தெளிவான விளக்கமின்மை ஆகியன ஒரே அணியில் நின்று இவர்களைச் செயற்படுவதற்கு வழிவிடவில்லை. மிகவும் தீர்க்கதரிசனத்துடனும், கலந்துரையாடல் மூலமும், சர்வதேச நியதிகளைச் சரியாகப் புரிந்துகொண்டும் செயற்பட்டிருந்தால் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் நமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்க முடியும். 1995 இல் சந்திரிகா பண்டார நாயக்காவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் பரிசீலிக்கத்தக்கது. இவவாறே 2004 இல் ஏற்பட்ட ஒஸ்லோ உடன் படிக்கையும் தமிழர் தாயகத்திற் பெருமளவு சுயாட்சியையும், மத்தியில் போதிய அதிகாரத்தையும் தந்திருக்கும். எனினும் இவையாவும் தவறவிடப்பட்டு இன்று தமிழரசுக் கட்சியினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரதும், தமிழீழ விடுதலைப் புலிகளதும், ஏனைய போராளிக் குழுக்களதும் பங்களிப்பாலும் எமது பிரச்சினை இன்று சர்வதேசத்தின் கண்களைத் திறந்திருக்கின்றது. எனினும், உள்ளூரில் எமது மக்கள் மத்தியில் கடந்த 30 ஆண்டுகளாக ஆயுதப்போராட்டம் ஏற்படுத்திய தாக்கம் பற்றிக் குறிப்பாக அழிவுகள் பற்றி மனக் குமுறல்கள் இருக்கவேதான் செய்கின்றன. இதனால் ஒருவித விரக்தியில் கையறு நிலையும் மக்கள் மனதிற குடிகொண்டு விட்டது. குறிப்பாக வன்னிப்பிரதேச மக்கள் 'அநாதைகள்' என்ற நிலைக்கு, "இழக்க வேண்டியவற்றை எல்லாம் இழந்த நிலைக்கு" உள்ளாக்கப்பட்டு விட்டனர். இதனால் எமது 60 வருடப் போராட்டத்தில் தமிழரசுக்கட்சி முன்னின்று நடாத்திய முதல் 30 வருட காலப்பகுதியைக் காட்டிலும் பிற்பகுதியான 30 வருடத்தில் பேரழிவுகளை எமது இனம் சந்தித்துவிட்டது.

### தமிழ்க் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும்

இதனை மனதிற்கொண்டு தான் தமிழரசுக்கட்சியைத் தந்தை செல்வா ஆரம்பித்தபோது சாத்வீகமே அதன் இலட்சியமாக இருத்தல் வேண்டும் என வற்புறுத்தினார். 1949 இலும் மக்கள் திக்கற்ற நிலையில் தான் காணப்பட்டார்கள். 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற கோஷத்துடன பாராளுமன்றம் சென்ற தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும், மந்திரிப்பதவிக்காக தமது இலட்சியத்திலிருந்து, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து தடுமாறிய போது காலத்தின் தேவையாக இலங்கைத் தமிழரசுக்கட்சி தோன்றி தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அடிப்படையில், ஒரு பூரண சமஷ்டி அடிப்படையில் நமது பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் எனக் கூறியது. இச்சந்தர்ப்பத்தில் இக் கட்சியைத் தொடக்கி வைத்து 1949 இல் தந்தை செல்வா ஆற்றிய உரையின் சில பகுதிகளை இங்கே தருவது பொருத்தமாகும்.

'யாம் கோருவது இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டிற்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள – சமஷ்டி அரசு - இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால், இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகின்றது. ........

எங்களுடைய ஒரே ஒரு நோக்கம் ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும். செய்ய வேண்டிய வேலை எவ்வளவு கஷ்டமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆயினும் அப்பணியைச் செய்து முடிக்க எம்மால் இயலும். அதைச் செய்தே தீரவேண்டும். எமக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல விடயங்கள் உள்ளன. யான் முன் குறிப்பிட்டதைப்போல, எமது மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் உறுதியான அரசியற் கொள்கையே எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். யாம் சிறந்த முறையில் - நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப போமானால், எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்திற்குக் காரணமாயிருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும்'.

ஆதலால் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இடை நடுவில் மந்திரிப் பதவிக்காகத் தமிழ் மக்களைக் கைவிட்டபோது தந்தை செல்வா தமிழ்மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத்தோன்றி இலங்கைத் தமிழரசுக்கட்சியைத் தொடங்கி இவ்வுரிமைப்போரை 'அமிர்' போன்ற இளம் தளபதிகளையும் இணைத்து நடாத்திச் சென்றதும் வரலாறு. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் வெற்றிடத்தை இலங்கைத் தமிழரசுக்கட்சி கச்சிதமாக ஒப்பேற்றியதும் வரலாறு.

### தார்மீகக் கடமையில்

இவ்வாறே இன்று ஆயுதப் போராட்டம் தோல்வியுற்ற நிலையில் அரசியலில் ஒரு பெரிய வெற்றிடம் காணப்படுகின்றது. இத்தகைய வெற்றிடம் தான் 1949 இலும் காணப்பட்டது. இதனால் அவ் வெற்றிடத்தை எவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி நிரப்பியதோ அதேபோன்று இன்றுள்ள அரசியல் வெற்றிடத்தையும் நிரப்பும் தார்மீகப் பொறுப்பும் கடமையும் தமிழரசுக் கட்சிக்குண்டு. காரணம் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஜனநாயக வழிநின்று 1949 இல் இருந்து ஒலித்து வரும் கட்சியும் இதுதான்.

ஆனால் சூழல் மாற்றத்தால் விரக்தியின் விழிம் பில் நிற்கும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது காலத்தின் தேவையாகி றது. இத்தகைய நம்பிக்கையை சாத்வீகத்திலும், ஜனநாயகக் கட்டமைப்பிலும் நம்பிக்கை கொண்ட தந்தை செல்வா கூறியது போன்று 'நம்பிக்கைக்குரிய ஊழியர்களை' 'நிலை தடுமாறாத தலைவர்களைக்' கட்சி அரவணைத்து மக்கள் முன்செல்வதன் மூலமே சாதிக்கமுடியும். எதற்கும் உறுதியான தலைவர்களின் வழி காட்டல் இதற்கு அவசியம். ஆதலால் அல்லற்பட்டு திக்கற்ற நிலையில் நிற்கும் மக்களுக்கு அறிவூட்டும் கடமை தமிழரசுக் கட்சிக்குண்டு. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் செய்த தியாகங்களை மக்கள் இன்றும் மறக்கவில்லை.

அவர்களை நன்றியுணர்வுடன் நினைவுகூரும் மக்கள் வட கிழக்கு மாகாணங்களில் உள். தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளின் சின்னமே தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னமாகும். இவ் வீடு தமிழர் தாயகத்தை இணைக்கும் பாலம் மட்டுமன்றி மடிந்த நமது தியாகிகளான தலைவர்களது நினைவுச் சின்னமும் கூட. இதனால் தமிழரசுக்கட்சியும் வீட்டுச்சின்னமும் தமிழரின் உரிமைப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவையாகின்றன. (முற்றும்)

---

*தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலை 1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13ஆம் திகதி அரங்கேறியது. இக்கொலை பற்றியும் அமிர்தலிங்கம் பற்றியும் இந்தியாவின் இன்றைய மத்திய அமைச்சராக விளங்கும் தமிழரான ப.சிதம்பரம் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் திகதி பின்வருமாறு கூறியிருந்தார்.*

*'தன் வாழ்நாளெல்லாம் இலங்கை வாழ் தமிழ் மக்களுடைய நலனுக்காகவே செயலாற்றிய அமிர்தலிங்கம் அவர்களை வேறொரு தமிழர் இயக்கத்தைச் சார்ந்தவர்களே படுகொலை செய்தது அழிக்கமுடியாத கறையாக அமைந்து விட்டது.*

*அமிர்தலிங்கம் அவர்களோடு 1986, 1987 ஆம் ஆண்டுகளில் நெருங்கிப் பழகினேன். இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் நடந்த காலத்திலே எனக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லிப் பேருதவியாக இருந்தார்கள். அவருடைய ஆழமான அனுபவம், தீர்க்கமான அறிவு, அழுத்தமான கொள்கைப்பிடிப்பு என்னைப் பெரிதும் கவர்ந்தன.*

*இலங்கை வாழ் தமிழ் மக்களின் இன்னல்கள் இன்னும் முடியவில்லை. ஒரே நேரத்தில் ஒளிக்கீற்று தோன்றுகிறது. இன்னொரு நேரத்தில் இருள் மீண்டும் சூழ்ந்து கொள்கிறது. தமிழர்களுக்குப் புதிய விடியல் ஏற்படும் நேரத்தில் அவர்களுக்குத் தலைமை ஏற்று நடத்திச் செல்ல அமிர்தலிங்கம் அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் மறைவு உலகத் தமிழருக்கு பேரிழப்பு.'*

*"அமிர்" பற்றி ப. சிதம்பரம்*





நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் முன்பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிராமசேவையாளர் ந.சுந்தரராஜன் முன்பள்ளி மாணவிக்கு பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விமலின் உண்ணாவிரத முடிவுக்கு அவரின் செல்ல மகளே காரணம்!

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணயின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ சாகும் வரையான உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தமைக்கு அவரது சின்ன வயது மகளின் உண்ணாவிரதப் போராட்டமே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விமல் வீரவன்சவின் மனைவி சசி தொலைபேசி அழைப்பு விடுத்திருக்கின்றார். கணவரை எப்படியேனும் உயிருடன் காப்பாற்றித்தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்.

விமல் வீரவன்ச உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்ற நாள் முதல் அவர் புதல்வியும் உணவு உண்ணாமல் அடம் பிடிக்கின்றார் என்று ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கின்றார்.

இதை அறிந்த உடனேயே விமல் வீரவன்சவின் மகளுடன் ஜனாதிபதி தொலைபேசியில் பேசினார். இரவுச் சாப்பாட்டை விமலின் மகள் சாப்பிட வேண்டும் என்றும் விமல் வீரவன்ஸவை மறுநாள் மதியச் சாப்பாட்டுக்கேனும் கட்டாயம் அழைத்து வருவார் என்றும் ஜனாதிபதி தொலைபேசியில் வாக்குறுதி வழங்கி இருக்கின்றார்.

இதன் பின்பு விமலின் குடும்பத்தினர் விமலைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். மகளின் உண்ணாவிரதம் குறித்து விமலுக்கு சாடைமாடையாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து அங்கு சென்ற ஜனாதிபதியும் பிரம்மாஸ்திரமாக அதைத் தான் பாவித்து இருக்கின்றார்.

இந்நிலையில் பாசத்துக்கு கட்டுப்பட்ட விமல் நான்கு நிபந்தனைகளை ஜனாதிபதிக்கு விதித்துக் கொண்டு உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார் எனத் தெரியவந்தது. (ச-5)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள்

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நாடளாவிய ரீதியில், பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினாலும் பொதுமக்களுக்கு ஆற்றப்படும் சகல சேவைகளையும் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு, உள்ளூராட்சி மன்றங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், வருடந்தோறும் உள்ளூராட்சி வாரம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி,மாகாணசபைகள் அமைச்சினால் பிரகடனப்படுத்தப்படும் இந்த செயற்பாட்டின் இவ்வாண்டுத் தொனிப்பொருள் "வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி சேவைகளினூடாக நல்லதொரு எதிர்காலம்" என்பதாகும்.

உள்ளூராட்சி வாரத்தின் முதல் ஆறு தினங்களிலும் வெவ்வேறு நோக்கங்களின் செயற்பாட்டின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதல் நாள் சுகாதார, துப்புரவு ஏற்பாட்டுத் தினமாகவும், இரண்டாம் நாள் கல்வி நூல் நிலைய அபிவிருத்தி மற்றும் விளையாட்டு தினமாகவும், மூன்றாம் நாள் சுற்றாடல் தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தின் நான்காம் நாள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மக்கள் பயன்பாட்டுத் தினமாக ஐந்தாம் நாளும், தகவல் தொழில்நுட்பத் தினமாக ஆறாம் நாளும் பெயரிடப்பட்டுள்ளன.

இறுதி நாளான எதிர்வரும் 18 ஆம்திகதி உள்ளூராட்சி வாரத்தின் இறுதி இலக்கை அடையும் வகையில் வைபவரீதியிலான நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. (6)

# இலங்கையர்கள் மூவருக்கு இரு வருட சிறைத் தண்டனை

(கொழும்பு)

கட்டாரில் ஏ.ரி.எம். இயந்திரம் ஒன்றை உடைத்து சுமார் 4 இலட்சத்துக்கும் அதிகமான கட்டார் றியால்களை கொள்ளையடித்த இலங்கையர்கள் மூன்று பேருக்கு அந்நாட்டு நீதிமன்றத்தால் 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வங்கியொன்றில் பொருத்தப்பட்டிருந்த ஏ.ரி.எம்.இயந்திரத்தை உடைத்து அதில் இருந்த பணத்தை குறித்த மூன்று இலங்கையர்களும் எடுத்துச் சென்றுள்ளனர்.

எனினும் அவர்களின் இந்த செய்கை வங்கியில் பொருத்தப்பட்டிருந்த இரகசிய கமராவில் பதிவானதைத் தொடர்ந்து அவர்கள் மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொள்ளையடித்த பணத்தை மறைத்து வைக்க உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைத்தண்டனை நிறைவடைந்த பின்னர் குறித்த நபர்கள் நாடு கடத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறைமையை உருவாக்க ஜனாதிபதி மஹிந்த இணக்கம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார பிரதமர் முறை ஒன்றை உருவாக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த யோசனைத் திட்டத்திற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் தவணைக் காலத்தை வரையறுக்கும் வகையில் தற்போது காணப்படும் சட்டங்களில் திருத்தம் கொண்டு வரும் அரசாங்கத்தின் முயற்சி கைவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் விவகாரங்கள் மற்றும் அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதிக்கும், ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறையை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவளிக்கும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தொடர்ந்தும் நீடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஜனநாயகமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# இலங்கையிலிருந்து மலேரியா நோயை முற்றாக ஒழிக்க நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து மலேரியா நோயை முற்றாக ஒழிக்க முடியுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தேசிய மலேரியா நோய் தடுப்புப் பிரசார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த தசாப்தங்களில் ஆயிரக்கணக்கானோர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1934 மற்றும் 1935 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 80 ஆயிரம் பேர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டளவில் இலங்கை பூராகவும் இந் நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2 இலட்சமாகக் காணப்பட்டது.


இருந்த போதிலும் மலேரியா நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பயனாக மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடிந்துள்ளது.

எனினும் முற்றாக மலேரியா நோயை ஒழிப்பதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இன்னும் 5 வருடங்களில் இந் நாட்டிலிருந்து மலேரியா நோயை முற்றாக ஒழிப்பதே இந்த தேசிய மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

உலகளாவிய நிதியத்திற்கான சர்வதேச அமைப்பானது காசநோய், எயிட்ஸ் மற்றும் மலேரியா நோய்த் தடுப்பு மற்றும் ஒழிப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு அதிகளவிலான நிதியினை வழங்கி வருகிறது.

இந்நிலையில் இலங்கை இன்னுமொரு பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. அது தான் டெங்கு நோயாகும். கடந்த 2009 ஆம் ஆண்டில் டெங்கு நோயினால் 35 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இவர்களில் 360 பேர் உயிரிழந்துள்ளனர்.



இருப்பினும் 2009 ஆம் ஆண்டை விடக்குறைந்த எண்ணிக்கையானோரே இவ்வாண்டில் இதுவரை காலப்பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு ஆரம்பகால தொடக்கம், இதுவரை காலப் பகுதியில் டெங்கு நோயினால் 16 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு இவர்களில் 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந் நோய் பிரச்சினையானது முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளதால் இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு முழு மக்களினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததென்றார். (6)

# வகுப்பறை கட்டடத் தொகுதி திறப்பு விழா

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தினரால், கட்டப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவனத்தின் பிரதித் தலைவர் ஆர். ரெங்கநாதனால் திறந்துவைக்கப்படுவதுடன், சாவகச்சேரி செலிங்கோ ஆயுள் காப்புறுதி கணனி மயப்படுத்தப்பட்ட கிளை நிலையத்தையும் பிற்பகல் 3.30 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார். (6-29)

# கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச்சினை

*கால் நரம்பு சுற்றிக்கொள்ளும் பிரச்சினை ஆண்களுக்குத்தான் அதிகம் வரும் என்பார்கள். இது பெண்களுக்கும் ஏற்பட வாய்ப் புண்டா?*

நீங்க வேற...ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிகம் வருவதற்கு வாய்ப்புள்ளது. பெண்களுக்கு சுரக்கும் ஓமோன்கள் தான் இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமை கிறது. 30 வயதுக்கு மேல் 70 வயது வரை யான பெண்களுக்குத் தான் அதிகம் வருகிறது.


*கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச்சினை என்றால் என்ன?*

கால் நரம்பு சுற்றிக்கொள்ளும் பிரச்சி னை என்பது , கால்களில் உள்ள நரம்பு கள் புடைத்துக்கொள்வதுதான். ஆரோக்கி யமான கால்களில் உள்ள நரம்புகள் இதயத்திலிருந்து செலுத்தப்படும் இரத் தத்தை ஒரே சீராகச் செல்ல அனுமதிக் கும்.அதேபோல கால்களிலிருந்து இதயத் திற்கு இரத்த ஓட்டம் சீராக நடைபெற வழி வகுக்கும்.இதற்குக் கால் நரம்புகளில் உள்ள வால்புகள் முக்கிய பங்கு வகிக்கின் றன. இவைபழுதடைந்தால், நரம்புகளில் அடைப்பு ஏற்பட்டு, அவை கால்களிலேயே தங்கிவிடும். இதனால் கால்கள் பாதிக்கப் படும் அல்லது கடுமையான வலி ஏற்படுத் தும்.

கால் நரம்புகளில் இருந்து இரத்தம் மீண்டும் இருதயத்திற்கு செல்லாத நிலை யில் கால்கள் வீக்கமடையும். இவ்விதம் கால் நரம்புகளில் இரத்தம் தேங்குவதால் நரம்புகள் சுருண்டுகொள்ளும். இதைத் தான் "வெரிகோஸ் வெயின் (Varicose Veins)" என்று ஆங்கிலத்தில் அழைப் பார் கள். இவர்கள் கால் வீக்கமடைவதுடன், நரம்புகள் சுருண்டு கொண்டிருப்பதையும் காணமுடியும். இரத்தம் தேங்கிவிடுவதால் நரம்புகள் கருநீல நிறத்தில் காட்சி அளிக் கும்.ஆரம்ப நிலை என்றால், சிறிய அளவில் மாறுபட்ட நிறத்திலான கோடுகள் சிலந்தி வலைபோன்று காட்சியளிக்கும்.

பெரும்பாலானோர் இது வெறும் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று நினைக் கிறார்கள். ஆனால் இது மருத்துவ ரீதியில் தீர்க்கப்பட வேண்டிய ஒரு நோய். நரம்பு கள் சுற்றிக்கொள்ளும் பிரச்சினை ஏற் பட்டால் கடுமையான வலி தோன்றும். சில சமயங்களில் உடலில் மிகுந்த களைப்பு ஏற்படும்.இந்நோய் மிகவும் முற்றிய நிலை யில் தோலின் நிறமே மாறும். தோலின் மீது கொப்புளங்கள் தோன்றும். கால்களிலும், கணுக்கால்களிலும் கொப்புளங்கள் தோன் றும். கொப்புளங்களிலிருந்து சிலசமயம் இரத்தம் வெளியேறும். சில சமயங்களில் இரத்தக் கட்டிகள் நரம்புகளில் ஏற்படக்கூட வாய்ப்புண்டு.

*எத்தகைய பெண்களுக்கு கால் நரம்பு சுற்றிக்கொள்ளும் பிரச்சினை ஏற்படும்?*




உடல் பருமனான பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண் கள், அதிலும் குறிப்பாக அதிக குழந்தை கள் பெறும் தாய்மார்களுக்கு இப்பிரச் சினை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

சில பெண்களுக்கு கரு வுற்ற காலத்திலேயே கால் களில் நரம்புகள் சுற்றிக் கொள்ளும் பிரச்சினை ஏற் படும். குழந்தை பிறந்தவுடன் இந்த நரம்புகள் மறைந்து விடும்.ஆனால் குழந்தை பெற்ற பின்னரும் தொடரும். பெற்றோர்களில் யாரேனும் ஒருவருக்கு இப் பிரச்சினை இருந் தால் குழந்தைகளுக்கு இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம்.

*கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச் சினை ஏற்படாமல் தடுப்பது எப்படி?*

இதைத் தடுப்பது மிகவும் கடினமானது. காரணம் மனிதர்கள் கால்களால் தானே நடக்கிறோம்? இருப்பினும் இந்நோய் ஏற்படு வதற்கான வாய்ப்புள்ள சிலர் முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதைத் தடுக்க முடியும். உடல் எடையைக் கட்டுப் பாட்டில் வைத்திருத்தல். நீண்டநேரம் நின்ற படியே பணிபுரிவதைத் தவிர்ப்பது. நார்ச்சத்து நிறைந்த உணவு வகைகளை அதிகம் உண் பது. கால்களில் எப்போதும் காலுறை அணி வது என இப்பிரச்சினை வராமல் தடுக்க முடியும்!

*கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச் சினை ஏற்பட்டால் அதற்கு அறுவை சிகிச்சை ஒன்றுதான் தீர்வா? வேறு மாற்று வழிகள் ஏதேனும் உண்டா?* இந்தப் பிரச்சனைக்கு அறுவை சிகிச்சை மட்டுமே தீர்வு இல்லை. நோயின் தீவிரத் தன்மையைப் பொறுத்து பல்வேறு சிகிச்சை முறைகள் உள்ளன.

***காலுறை அணிதல்***: நோய் ஆரம்ப நிலையில் இருப்பின் பிரத்தியேகமாக தயா ரிக்கப்பட்ட காலுறைகளை அணிந்து இந் நோயைக் குணப்படுத்தலாம்.

***மருந்து மூலம் குணப்படுத்துதல்***: மருந்து அளித்து குணப்படுத்தும் நிலையில் சில ருக்கு இருக்கும். அத்தகையோருக்கு மருந் துகளுடன்பிரத்தியேககாலுறை அணிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படும். இது உரிய பலனை அளிக்கும். இருப்பினும் கால்களில் முதலில் சுருண்ட நரம்புகளை முற்றிலுமாக பழைய நிலைக்குக் கொண்டு செல்லவோ குணப்படுத்தவோ இயலாது.

***ஊசி மூலம் குணப்படுத்துதல்***: இந்த சிகிச்சைக்கு ஸ்கெலரோதெரபி என்று பெயர். ஆனால் இந்த சிகிச்சை நீண்டகாலம் மேற்கொள்ள வேண்டியவை. இத்தகைய சிகிச்சை முறைகளை முழு அளவில் மேற் கொள்ளாவிடில் முழு அளவில் பயன் கிடைக் காது. மேலும்இத்தகைய சிகிச்சை முறை களில் நரம்புகளில் இரத்தக் கட்டிகள் தோன் றும். சில சமயங்களில் இந்த இரத்தக் கட்டிகள் இருதயத்தை நோக்கி நகர்வதற் கான வாய்ப்புகளும் உண்டு அல்லது நுரை யீரல் போன்ற பகுதி சிக்கலை ஏற்படுத் தலாம்.

***அறுவைச் சிகிச்சை***: நோயுற்ற காலில் உள்ள பழுதடைந்த நரம்புப் பகுதி களை வெட்டி எடுத்து நீக்கும் அறுவைச் சிகிச்சை முறை மிகவும் சிக்கலானது. மேலும் அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் மருந் துகள் சாப்பிட வேண்டியிருக்கும். மருத்துவ மனையின் இரண்டு வாரம் முதல் நான்கு வாரம் வரை தங்க வேண்டியிருக்கும்.

***லேசர் சிகிச்சை***: பழுதடைந்த நரம்பு களில் லேசர் ஃபிளமென்ட் மூலம் அடைப் பது நவீன முறையாகும்.இந்த சிகிச்சை முறையிலும் சில பாதக அம்சங்கள் உள்ளன.

லேசர் சிகிச்சையின் போது வெளியா கும் அதிக பட்ச வெப்பம், கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.அத்துடன் அருகிலுள்ள திசுக்களையும் இது சேதப் படுத்துவதற்கான வாய்ப்பு உண்டு.


***ரேடியோ அலை சிகிச்சை (Radio Frequency Ablation(RFA -ஆர். எஃப்ஏ)***: இப்புதிய முறை பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. காரணம், இந்த சிகிச்சை முறையில் வலி மிகக் குறைந்த அளவில் இருக்கும்.தவிர மருத்துவமனையில் உள் நோயாளியாக தங்கி சிகிச்சை பெறாமல்,

டாக்டர் ஷிராஜ் கரீம்
சென்னை

புற நோயாளியைப் போல சிகிச்சை பெற் றாலே போதும். பாதிக்கப்பட்ட பகுதியில் மட்டும் மறத்துப் போவதற்கான ஊசி செலுத்தப்படும்.இந்த சிகிச்சை முறையால் இரத்த அடைப்பு ஏற்படுவதில் லை.மேலும் அருகிலுள்ள திசுக்களும் பாதிக்கப்படாது. அதிக வெப்பமும் வெளியேறுவது இல்லை. பாதிக்கப்பட்ட நரம்புகள் மூடப்பட்டவுடன், அருகிலுள்ள ஆரோக்கியமான நரம்பு களில் இரத்தம் பாயத் தொடங்கும். இதனால் கால்கள் பழைய நிலைக்குத் திரும்பும்.




# எலும்பில் ஏற்படும் புற்றுநோய்




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சாதாரணமாகவும் மூட்டுவலி வரலாம். ஆனால் மாத்திரைகள் எடுத்தும் வலி குறையவில்லை என்றால் புற்றுநோயாக இருக்கலாம் எனச் சந்தேகப்படுவது அவசியம்.ஏனெனில் ஆரம்ப நிலையி லேயே புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் நிலையில் சிகிச்சை நல்ல பலனைத் தரும்.

**எந்த வயதினருக்கு எலும்புப் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது?**

எந்த வயதிலும் வரலாம் என்றாலும் 10 முதல் 30 வயதுள்ளோருக்கும் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.இளம் வயதில் மூட்டு வலிவந்தால், அலட்சிய மாக இருக்கக்கூடாது.

**எலும்புப் புற்றுநோய்களில் எத்தனை வகைகள் உள்ளன?**

எலும்புப் புற்றுநோயில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று பரவும் தன்மை கொண்டது. மற்றொ ன்று பரவாத தன்மை கொண்டது. பரவும் தன்மைப் புற்றுநோயை "Malignant Cancer" என்கிறோம். பரவாத புற்றுநோயை "Benign Cancer" என்கி றோம். பரவாத புற்றுநோயால் அதிக அளவு ஆபத்தில்லை. சிகிச்சைக்கு நல்ல பலன் உண்டு.ஆனால் பரவும் தன்மைகொண்ட புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்தாலும் ஆபத்து உண்டு.

**எலும்புப் புற்றுநோயை உறுதிப்படுத்தும் பரிசோதனைகள் என்ன?**

கிளினிக்கல் பரிசோதனையிலே 60 சதவீதம் உறுதிப்படுத்தி விடலாம். இருப்பி னும் எக்ஸ்ரே, அதைத் தொடர்ந்து "போன் ஸ்கேன் (Bone Scan)" ஆகியவற்றின் மூலம் மிகத் துல்லியமாகப் புற்றுநோய் பரவியுள்ள அளவைக் கண்டறிய முடியும். ஸ்கேன் மூலம் உறுதிப்படுத்தினாலும் திசுப் பரிசோதனை (பயாப்ஸி) செய்து 100 சத வீதம் உறுதியாகச் சொல்லமுடியும்.

**எலும்புப் புற்றுநோய்க்கு சிகிச்சை என்ன?**

புற்றுநோயின் தன்மை, அது எந்த இடத் தில் உள்ளது என்பதைப் பொறுத்து சிகிச்சை அமையும்.மூன்று வகை சிகிச்சைகள் உள் ளன. ஹீமோதெரப்பி (Chemotherapy) மருந்து கொடுப்பது, ரேடியோ தெரபி (Radiotherapy) கதிரியக்கச் சிகிச்சை மூலம் புற்றுநோய் செல்கள் அழிப்பது ஆகியவை முதல் கட்ட சிகிச்சைகள். மூன்றாவதாக அறு வைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை மூலம் புற்றுநோய் பரவியுள்ள இடத்தை முற்றிலு மாக அகற்றி விடுவது

**எலும்புப் புற்றுநோயில் அறுவைச் சிகிச்சையின் பங்கு என்ன?**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட எலும்பை அகற்றிவிட்டு செயற்கை எலும்பு பொருத்த வேண்டியது அவசியம். இல்லையெனில் நோயாளி இயல்பாக நடமாட முடியாமல் அல்லது செயல்பட முடியாமல் ஊனமாகி விடும் சூழ்நிலை ஏற்படும். பாதிக்கப்பட்ட எலும்புப் பகுதியை அகற்றிவிட்டு செயற்கை உறுப்பு அல்லது போன் சிமெண்ட் அல் லது இறந்தவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட எலும்பைப் பொருத்திச் சரி செய்யலாம்.

இதுபோன்று மாற்று எலும்பு பொருத் துவதால் புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்திவிடமுடியாது. நோயால் துன்பப்படாமல் தரமான வாழ்க்கை (Quality life) வாழ வழிசெய்யலாம்.

**செயற்கை எலும்புக்குப் பதிலாக இறந்தவர்களின் எலும்பை எடுத்து எலும்புப் புற்றுநோயாளிகளுக்குப் பொருத்த முடியுமா?**

தாராளமாகப் பொருத்தமுடியும். இலங் கையில் எலும்பைத் தானம் கொடுக்க முன்கூட்டியே விருப்பம் தெரிவித்துப் பதிவுசெய்கின்றனர்.

**எலும்பு வங்கி என்றால் என்ன?**

இறந்தவர்களிடமிருந்து 6மணி நேரத்துக்குள் எலும்பை எடுத்து அதை மைனஸ் 18 டிகிரி சென்டிகிரேடில் (Deep Freezer) வைக்கவேண்டும்.இவ்வாறு

டாக்டர்
மயில்வாகனன் நடராஜன்

செய்தால் 2ஆண்டுகள் வரை எலும்பை மற்றவர்களுக்குப் பயன்படுத்தலாம். ஏற்க னவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் , எய்ட்ஸ் நோயாளிகள், ஹெபடைடீஸ் பி, சி மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர் களின் எலும்பை எடுக்கக்கூடாது.

எவ்வளவுக்கெவ்வளவுக்கெட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். -பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வேலணை வைத்தியசாலை சம்பவம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும்

வேலணை அரசினர் வைத்தியசாலையில் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவரின் மர்ம மரணம் வடபுலத்தில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

குடும்ப நல உத்தியோகத்தர் தர்சிகா கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்ற உண்மையை இதுவரை அறிய முடியவில்லை.

தர்சிகாவின் மரணத்தில் எல்லோருமே சாதிக்கும் மௌனம் சம்மந்தப்பட்ட டாக்டர் பலமான பின்புலம் உடையவர் என்பதை உறுதி செய்கிறது.

திருமதி விஜயகலா மகேஸ்வரன் தவிர தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உடனடியாக அறிக்கை எதனையும் விடவில்லை.

இது தேர்தல் காலமாக இருந்திருந்தால், தர்சிகாவின் பூதவுடல் அடங்கிய பேழையை தமிழ் வேட்பாளர்களே தூக்கிச் சுமந்திருப்பர்.

தந்தை சரவணையை ஆரத்தழுவி இருப்பர். தேர்தல் முடிந்து பதவி கிடைத்த படியால் அவர்கள் அறிக்கை எதனையும் வெளியிடவில்லை.

எங்கள் பிரதிநிதிகள் முழுமையான பச்சோந்திகளாக இருக்கும் பொழுது சிங்கள டாக்டர் மனிதாபிமானமற்று நடந்து கொள்வதை எப்படித் தடுப்பது?

தர்சிகாவின் மரணம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்க வேண்டும். குற்றம் இழைத்தவரை சட்டத்தின் முன் நிறுத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வருவது அவசியம்.

தேவையாயின் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் போது குடும்ப நல உத்தியோகத்தர் தர்சிகாவின் மர்ம மரணத்தை அம்பலப்படுத்தியவன் நானே! எனவே எனக்கு உங்கள் வாக்கு என்று வசனம் எழுதி பிரசாரம் செய்யுங்கள்.

ஆனால் எம்.பி பதவி கிடைத்துவிட்டதென்பதற்காக குற்றவாளிகள் தப்பித்துச் செல்வதற்கு துணை போகாதீர்கள்.

தர்சிகாவின் மரணத்திற்கு காரணமாக இருந்தவர் தண்டிக்கப்பட வேண்டும். இங்கு இனம், மதம், மொழி என்ற பேச்சுக்கு இடம் இல்லை.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை இலங்கைச் சட்டம் வலியுறுத்தும் போது எவரும் தயக்கம் காட்டத் தேவையில்லை.

அதேநேரம் சிங்கள டாக்டர் ஒருவரின் தகாத நடவடிக்கைக்காக மனித நேயம் கொண்ட எத்தனையோ சிங்கள டாக்டர்களின் பணியை நாம் ஒரு போதும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

ஆனாலும் மருத்துவத் துறைக்கே இழுக்கை ஏற்படுத்தக் கூடியவர்களை களைவதற்கு இலங்கை மருத்துவ சங்கங்கள் குரல் கொடுப்பது அவசியம். இதனை அவர்கள் செய்வார் என்று நம்பலாம்.

# வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியதாக இயக்குநர் சீமான் கைது



(சென்னை)

வன்முறை யைத் தூண்டும் வகையில் பேசியதாக, 'நாம் தமிழர்' கட்சியின் தலைவரும் திரைப்பட இயக்குநருமான சீமான் நேற்று கைது செய்யப்பட்டார்.

சென்னையில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்துக்கு பேட்டியளிக்க வந்தபோது, அவர் நேற்றுக்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இலங்கையின் போர்க்குற்றம் குறித்து விசாரிக்க ஐ.நா. நியமித்துள்ள குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடுகளைக் கண்டித்தும், தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொல்வதைக் கண்டித்தும் நாம்தமிழர் அமைப்பு சார்பில், சென்னை யில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதில் சீமானின் பேச்சு, இனக்கலவரத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளதாகக் கூறி, வடக்கு கடற்கரை பொலிஸ் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 153 -ஏ (வன்முறையைத் தூண்டும் வகையில் 2 பிரிவினருக்கிடையே மதம், மொழி, இனத்தின் அடிப்படையில் மோதலை ஏற்படுத்தும் விதத்தில் பேசுவது, செயல்படுவது. பிரிவு 188 நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் பேசியது) ஆகிய இரண்டு சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரவில் இருந்து சீமானை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார்ஈடுபட்டுவந்தனர். அவரைக் கைது செய்ய, வட சென்னை இணை ஆணையாளர் சேசசாயி மேற்பார்வையில் தனிப்படை அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சென்னையில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் நேற்றுமுன் தினம் முற்பகல் பேட்டியளிக்க வந்த போது, அங்கு காத்திருந்த பொலிஸார் சீமானைக் கைது செய்தனர்.

முன்னதாக சனிக்கிழமை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது சீமான் பேசுகையில்,

"ஐ.நா. குழு இலங்கையில்நடந்த போர்க்குற்றத்தை நிரூபிக்கும். அப்படி நிரூபித்து விட்டால், தமிழ் ஈழம் தானே அமைந்து விடும். எனவே தமிழக தலைவர்களுக்கு நாம் தமிழர் சார்பில் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். உதவி செய்யவில்லையென் றாலும் பரவாயில்லை. உபத்திரவம் செய் யாதீர்கள். உதவி செய்கிறேன் என்று ஏதேனும் பேசிக் காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்.

இதுவரை 500 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பலியாகியுள்ளனர். ஆனால் இப்போது ஒருவர் பலியானதற்கு மட்டும் முதல்வர் கருணாநிதி அக்கறை செலுத்துவது ஏன்? பிரதமருக்கு கடிதம் எழுது வது ஏன்? இவரின் குடும்பத்திற்கு மட்டும் 3 இலட்சம் நிவாரணத் தொகை அறிவிப்பது ஏன்? எல்லாம் தேர்தல் நெருங்கிவிட்டது என்பதற்காகத்தான்.

தமிழகத்தில் சிங்களவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று நாம் தமிழர் கட்சி கணக்கெடுத்து வைத்திருக்கிறது. இனி ஒரு முறை தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டால், இங்குள்ள சிங்களவர்களை உயிருடன் விட மாட்டோம். அவர்கள் யாரும் உயிருடன் இலங்கை திரும்ப முடியாது என்று எச்சரிக்கிறேன்" என்றார் சீமான். சிங்களவர்களை உயிருடன் விடமாட்டோம் என்ற மிரட்டலுக்காகவே சீமான் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. (6)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் மாற்றமில்லை

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் மாற்றம் இல்லை என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை உயர்ஸ் தானிகர் பேர்னாட் சாவேஜ் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிசை கடந்த சந்தித்த போது நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு நடத்த இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் வாய்ப்பிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அரசாங்கத்திற்கும் பொதுவான வகையில் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கான வழி முறை ஒன்று குறித்து ஆராயப்படும் என இந்த சந்திப்பின் போது இனம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த நிபந்தனைகளில் சில பாதுகாப்பு சம்பந்தப்பட்டதாக காணப்படுகின்ற நிலையில் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அவற்றுள் மீள் குடியேற்றம் உள்ளிட்ட சில நிபந்தனைகள் தற்போதும் அரசாங்கத்தினால் முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் விளக்கம் அளித்துள்ளார். (6)

# கூட்டுறவுத் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சங்கானை பிராந்திய சபை 88 ஆவது சர்வதேச கூட்டுறவுத்தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிராந்திய சபைத் தலைவர் அருள்நெறிச் செல்வர் வி.செல்வரத்தினம் ஜே.பி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்கிறார். (ச-3)

# நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் இலங்கையின் வரலாற்றிலேயே எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து செயலாற்றிய ஒரேயொரு தமிழினத் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் மற்றும் யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் யோகேஸ்வரன் ஆகியோரின் நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (சு)

# கிளி.நடமாடும் சேவை கரைச்சிக்கு மாற்றம்

சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெற இருந்த நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந் நடமாடும் சேவை இன்று கரைச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-3)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மதம்



எந்த மதமும் மனிதர்களை கொடுமைப்படுத்தவில்லை. எந்த மதமும் சூனியக்காரிகளைக் கொளுத்தவில்லை. எந்த மதமும் இந்தகைய செயல்களைக் செய்யவிலவ்லை. அப்படியானால் இவற்றைச் செய்யும்படி மக்களைத் தூண்டியது எது? அரசியல் ஒரு போதும் மதம் அல்ல. மதத்தின் பெயரில் அரசியல் நிலவுமானால் அது யாருடையதவறு?

மனிதன் இறையனுபூதி பெறவேண்டும் அவரை உணர வேண்டும் அவரைப் பார்க்க வேுண்டும். அவருடன் பேச வேண்டும். அது தான் மதம் .

மதம் என்பது அனுபூதி வெறும் பேச்சோ நம்ப முயற்சிப்பதோடு இருட்டில் தேடுவதோ முன்னோர்களின் வார்த்தைகளைப் கிளிப்பிள்ளைபோல் ஒப்பித்துவிட்டு அது தான் மதம் என்று நினைப்பதோ மத உண்மைகளை அரசியலாக்குவதோ மதம் அல்லவே அல்ல.



திருநெல்வேலி கொமர்ஷல் வங்கிக் கிளை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இவ் நிகழ்வில் பிரதம செயற்பாட்டு முகாமையாளர் ரவி டயஸ் நாடா வெட்டி வங்கிக்கிளையைத் திறந்து வைப்பதையும் கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரஜீவன்,யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முக லிங்கன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் திருநெல்வேலி வங்கிக் கிளையின் முகாமையாளர் ராஜமனோகரன் உரையாற்றுவதையும் பிரதம செயற்பாட்டு முகாமையாளர் ரவி டயஸ் முதலாவது வங்கி கணக்கை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# விண்ணப்பம் கோரல்

(அல்வாய்)

வவுனியா மருக்காரம்பளை பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் வடமாகாண தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு கடமை நிறைவேற்று அடிப்படையில் ஆளணியினர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய நிலையத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இதில் மாகாண தகவல் தொழில் நுட்ப நிலைய முகாமையாளர்- 01 , மாகாண தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளர் - 02 ஆகிய பதவிக்கே விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இது தொடர்பாக இதற்கு தகுதியுள்ள யாழ். மாவட்ட வலயங்கள்ளச் சேர்ந்த விண்ணப்ப தாரிகள் வலயக்கல்விப் பணிப்பாளர்களின் சிபாரிசுடன் 20ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக உதவிக் கல்விப்பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம்,மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம் ,வரோதய நகர் திருகோணமலை என்ற முகவரிக்கு விண் ணப்பங்களை சுய விபரங்களுடன் தயா ரித்து அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள் ளப்படுகிறார்கள். வலயக்கல்விப் பணிப்பா ளர்களின் சிபாரிசின்றி கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிக ளுக்கு மாகாண கல்வித்திணைக்களத்தி னால் எழுத்துப்பரீட்சை ,செயல்முறைப் பரீட்சை , நேர்முகப்பரீட்சை என்பன முறையே நடத் தப்பட்டு பதவிக்குரியவர்கள் தேர்ந் தெடுக் கப்படுவார்கள் என வடமாகாண கல்விப் பணிப்பாளர்கள் வீ.இராசையா சகல வலயங் களுக்கும் தொலைநகல் மூலம் அறிவித்துள் ளார். (6-19)

# அடிக்கல் நாட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் விணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இராஜகோ புரத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா எதிர் வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10-15 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளதாக தேவஸ் தான பிரதம குரு பிரம்ம ஸ்ரீ அ.துரைச்சாமி ஐயர் தெரிவித்துள்ளார். (4)

# சரத்பொன்சேகாவின் விளக்கமறியல் 26ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் விளக்கமறியலை 26ஆம் திகதி வரை நீடிக்குமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அமெரிக்காவில் உள்ள தனது மகளுடன் தொலைபேசியில் உரையாடல் அனுமதிக்குமாறு சரத்பொன்சேகா விடுத் திருந்த வேண்டுகோளையும் கோட்டை நீதவான் நிராகரித்துள்ளார்.

இதேவேளை ஜெனரல் பொன்சேகாவின் உடல் நலம் கருதி சிறைக்கூடத்திற்கு வெளியே நடைப்பயிற்சியில் ஈடுபடுவதற்கு அவரை அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவு பிறப் பித்துள்ளார். (6)

# ஆஸி.செனற் சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ்ப் பெண் போட்டி

அவுஸ்திரேலிய செனற் சபை தேர்தலில் கிறீன் கட்சியின் வேட்பாளராக அங்கு புலம் பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் போட்டியிடுகின்றார். பிராமி ஜெகன் வயது(30) என்ற முன்னாள் ஊடக வியலாளருக்கே இச் சந்தர்ப்பம் கிடைத்துள் ளது.

இவர் சிறுமியாக இருக்கும்போதே உள் நாட்டு யுத்தம் காரணமாக, குடும்பத்தினரு டன் நாட்டை விட்டு வெளியேறி சோமாலியா, தான்சானியா, மலேசியா ஆகிய நாடுகளில் அலைந்து திரிந்து பின் அவுஸ்திரேலியா வில் வசிக்கின்றார்.

கிறீன் கட்சியின் செனற் வேட்பாளராக நிய மிக்கப்பட்டிருக்கின்றமை குறித்துக் கருத்துக் கூறிய அவர், தமிழ் சமூகத்தில் ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்கிற நோக்கத் திலேயே இத் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்றும் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் ஈழத்தமிழ் அகதிகளுக்கு புகலிடம் பெற்றுக் கொடுக்கின்றமையே தனது அரசியல் கொள்கை என்றும் குறிப்பிட்டுள்ளார். (6)

# உயிரினங்களை விழுங்கும் தாவரம் கண்டு பிடிப்பு


உயிருடன் உள்ள எலி போன்ற உயிரி னங்களை அப்படியே கொல்லும் வல்லமை கொண்ட தாவரம் ஒன்று தொடர்பான அதிர்ச் சித் தகவலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள் ளனர். மனிதர்கள் மீது அப்படியே படர்ந்து க்சக்கிக்கொன்று விடும் செடி கொடிகளைப் பற்றி கதைகளில் படித்திருப்பீர்கள். ஆனால் உண்மையில் அப்படி ஒரு செடி இருப்பதை விஞ் ஞானிகள் இப்போது கண்டுபிடித்துள்ளனர்.

இந்த செடியின் இலைகள் உயிருடன் உள்ள எலி போன்ற உயிரினங்களை அப்படியே கொல்லப்பார்த்த விஞ்ஞானிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பிரபல தாவர இயல் விஞ்ஞானிகள் ஸ்டூவர்ட் மெக் பெர் சன் அலாஸ்டியர் ராபின்சன் தலைமையி லான விஞ்ஞானிகள் குழு பிலிப்பைன்ஸ் நாட்டின் விக்டோரியா மலைப்பகுதியில் செடி, கொடிகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண் டிருந்தனர். அப்போது தான் இந்த மாமிசம் உண்ணும் தாவரம் பற்றி தெரிந்து கொண்ட னர். இந்த மலைப்பகுதியில் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த மிஷனரிகள் இந்த அபூர்வ தாவரம் பற்றி கேள்விப்பட்டனர். அவர் கள் கொடுத்த தகவலை ஆராய்ச்சி செய்த போது தான் இந்த தாவரம் பற்றி தெரிந்து கொண்டனர்.

இது குறித்து மெக்பெர்சன் கூறியதாவது,

இந்த கண்டுபிடிப்பு மிக மிக முக்கியமா னது. 21ஆம் நூற்றாண்டு வரை இப்படி ஒரு தாவரம் இருப்பதைக் கண்டுபிடிக்காமல் இருந்ததே மிகவும் அதிசயம் தான். இயற்கை உலகின் அதிசயம் அழகைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ள மிகவும் ஆவலாகவுள்ள வர் சர்டேவிட் அட்டன்பரோ.

எனவே அவர் பெயரிலேயே இந்த தாவ ரத்தை அழைக்க முடிபு செய்துள்ளோம்.



இனி இந்த தாவரம் நேபன் தஸ் அட்டன் பரோகி என அழைக்கப்படும். சிவப்பு பச்சை நிறத்தில் உள்ளது. இதன் தண்டு நான்கு அடி உயரம் வரை வளரும். விக்டோரியா மலை சரிவுக ளில் பெரும் புதர்களுக்கு மத்தியில் மட்டும் இந்தச் செடி வளர்கிறது.

இந்த செடியின் இலைகள் தான் அந்த செடிக்கு வாய்போல் உள்ளது. அதன் மேல் அமரும் எலி போன்றவற்றை அப்படியே பிடித் துக்கொள்கிறது. இலையில் சுரக்கும் ஒரு வித வழுவழுப்பான நொதியங்களில் இருந்து எலிகள் தப்ப முடியாது. பின்னர் அந்த நொதி யங்களே எலிகளைக் கொன்றுவிடுகிறது. எலிகள் மட்டுமல்ல பூச்சிகள் போன்ற சிறிய உயிரினங்களையும் இந்தத் தாவரம் கபளீ கரம் செய்து விடும். தாவரவியலில் இந்த மாமி சம் உண்ணும் தாவரம் கண்டு பிடிப்பு மிக முக்கியமானது. இவ்வாறு மெக் பெர்சன் கூறி னார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக தாவரவியல் முன்னாள் பேராசிரியர் இவர். 2007முதல் இந்தத் தாவரம் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளதுடன் தன் ஆராய்ச்சியில் மாமிசதாவரம் பற்றிய உண்மைகளை முழு மை யாகக் கண்டுபிடித்த பின்னர் சமீபத் தில் இந்த அதிசயத்தை உலகிற்கு அறிவித்தார். (6)

# 13 ஆயுள்வேத மருத்துவர்கள் கைது

(கொழும்பு)

நோயாளர்களுக்கு மேற்கத்தேய மருந்து வகைகளைக் கொடுக்கும் ஆயுள்வேத மருத் துவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றி வளைப்புக்கள் நாடளா விய ரீதியில் எடுக்கப்படுவதாக தேசிய ஔட தங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் கேமந்த பனரகம தகவல் தருகையில், நோயாளர்களுக்கு மேற்கத்தேய மருந்து வகைகளைக்கொடுத்த 13 ஆயுள்வேத மருத்துவர்கள் கைது செய்யப்பட்டதாக கூறி னார்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் மாவட்ட அதிகாரிகள் மேற் கொண்ட சுற்றி வளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக டாக்டர் மேலும் கூறி னார். (6-4)











ஹற்றன் நஷனல் வங்கியின் 191 ஆவது கிளை நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் ஹற்றன் நஷனல் வங்கியின் வலையமைப்பு முகாமைத்துவ பிரதிப் பொதுமுகாமையாளர் திருமதி கிருஷாந்தி தம்பையா வங்கியை திறந்து வைப்பதையும் வாடிக்கை யாளர்கள் வைப்புச் செய்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- போட்டோ ரவி (யாழ்) )

## சிறந்த கிரிக்கெட் அணி தெரிவில் யாழ். பல்கலைக்கழக அணி முன்னிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டுக்கான யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவில் யாழ். பல்கலைக்கழக அணி 20 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் உள்ளது.

ஜொலிஸ்ரார்ஸ் அணி 16 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும் சிறி காமாட்சி சனசமூக நிலைய கழக அணி 13 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலும் யாழ்.சென்றல் அணி 9 புள்ளிகளுடனும் கே.சீ.சீ.சீ. அணி 6 புள்ளிகளையும் அரியாலை சென்றல் அணி 6 புள்ளிகளையும் பெற்று 4ஆம், 5 ஆம் இடங்களில் உள்ளது.

கிராஸ்கொப்பர்ஸ், ஈகிள்ஸ், ஓல்ட்கோல்ஸ், யூனியன்ஸ் அணிகள் 5 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்தையும் மானிப்பாய் பரிஸ் அணி, ஸ்ரான்லி அணி, ஜங்ஸ்ரார் அணிகள் 3 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்தையும் சென்றலைட்ஸ் அணி, நியூஸ்ரார்ஸ் அணி, பற்றீசியன்ஸ் அணி, மட்டுவில் வளர்மதி அணி, யாழ்.ஜொனியன்ஸ் அணி, திருநெல்வேலி கிரிக்கெட் அணிகள் புள்ளிகள் எதுவும் பெறாத நிலையில் உள்ளன.

ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று சிறந்த அணியாக தெரிவு செய்யப்படும் அணிக்கு துடுப்பாட்ட தொடர்புடைய ஓர் பெரியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும், 10 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் வழங்கப்படும். இப் பரிசில்கள் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டியில் வழங்கப்படும். (ச-5)

## உலகக்கிண்ண இறுதிப்போட்டியை 70 கோடி பேர் டி.வியில் பார்த்தனர்

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் ஸ்பெயின்-நெதர்லாந்து அணிகள் மோதிய இறுதி ஆட்டத்தை 70 கோடி பேர் டி.வியில் பார்த்ததாக பிபா தெரிவித்துள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து இறுதி ஆட்டம் ஜோகனஸ்பேர்க்கில் உள்ள சொக்கர்சிட்டி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்த போட்டியை 215 நாடுகளில் நேரடியாக ஒளிபரப்ப பல்வேறு டி.வி. நிறுவனங்களுடன் பிபா ஒப்பந்தம் செய்திருந்தது. அதன் படி நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டி 215 நாடுகளில் நிறைவு விழா நிகழ்ச்சியுடன் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

இந்த இறுதி போட்டியை மட்டும் 70 கோடி மக்கள் டி.வியில் கண்டுகளித்ததாக பிபா தெரிவித்துள்ளது.

ஸ்பெயின் மற்றும் நெதர்லாந்து மக்கள் தொகையில் 90 சதவீதம் பேர் இறுதி போட்டியை பார்த்ததாகவும் அது கூறியுள்ளது.

கடந்த உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தையும் 70 கோடி மக்கள் டி.வியில் பார்த்தது குறிப்பிடத்தக்கது. இதில் பிரான்ஸ்-இத்தாலி அணிகள் மோதின.

கடந்த 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழா நிகழ்ச்சியை 60 கோடி மக்கள் டி.வியில் கண்டுகளித்ததும் குறிப்பிடத்தக்கது.

## தங்கப்பந்து விருது போர்லனுக்கு; தங்க காலணி விருது முல்லருக்கு



போர்லன்

உருகுவே வீரர் டீகோ போர்லானுக்கு சிறந்த வீரருக்கான தங்க பந்து விருது வழங்கப்பட்டது. ஜேர்மனி இளம் வீரர் தோமஸ் முல்லருக்கு தங்க காலணி (கோல்டன் ஷு) விருது வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உலகக்கிண்ண கால்பந் தாட்டத் தொடரிலும் சிறந்த வீரர் ஒருவருக்கு அடிடாஸ் தங்க பந்து விருது வழங்கப்படும். இந்த விருதுக்கான போட்டியில் ஸ்பெயின் வீரர் டேவிட்வில்லா, நெதர்லாந்தின் வெஸ்ஸி ஸ்னைடர் ஆகியோருடன் உருகுவே வீரர் டீகோ போர்லானும் இருந்தார்.

இதற்கிடையே தங்க பந்து விருதுக்குரிய வீரரை தேர்வு செய்ய பத்திரிகையாளர்களின் வாக்களிப்பு நேற்று முன்தினம் நடந்தது. இதில் உருகுவே லீகோ போர்லான் முதலிடம் பெற்று தங்கப்பந்து விருதை தட்டிச்சென்றார். இந்த உலகக்கிண்ணத் தொடரில் இவர் 5 கோல்களை அடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மான் செஸ்டர் யுனைடெட்டின் முன்னாள் வீரரான இவர் தற்போது ஸ்பெயினின் அத்லெடிக் மாட்ரிட் அணிக்காக விளையாடிவருகிறார்.

சிறந்த இளம் வீரருக்கான விருதை ஜேர்மனியின் தோமஸ் முல்லர் பெற்றார் இது தவிர அதிக கோல்கள் அடித்ததற்காகவும் வழங்கப்படும் தங்க காலணி விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தோமஸ் முல்லர் இந்த உலக கோப்பையில் 5 கோல்கள் அடித்ததோடு 3 கோல்கள்



முல்லர்

அடிக்கவும் உதவியாக இருந்தார். சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை ஸ்பெயின் வீரர் இகெர் கேசிலாஸ் பெற்றார்.

இவருக்கு தங்க கிளவுஸ் வழங்கப்பட்டது. சிறந்த அணிக்கான விருது ஸ்பெயினுக்கு வழங்கப்பட்டது.

## பால் ஒக்டோபஸின் கணிப்பை முறியடிக்க நெதர்லாந்தில் நடந்த பிரார்த்தனைகள்

சிறப்பு பிரார்த்தனையில் உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின்தான் வெற்றி பெறும் என்று பால் ஒக்போபஸ் கணித்திருந்தது.

அதன் கணிப்பு பலிக்கக் கூடாது என்று நேற்று முன்தினம் நெதர்லாந்தில் பல தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனை நடந்தது. ஆனால் அதையும் மீறி பால் சொன்ன படியே ஸ்பெயின் வெற்றி பெற்று விட்டது.

உலகக்கிண்ண இறுதி ஆட்டத்துக்கு நெதர்லாந்து அணி 3ஆவது முறையாக தகுதி பெற்றுள்ளது.

இதற்கு முன் 1974 மற்றும் 1978ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியில் ஜேர்மனி மற்றும் ஆர்ஜென்டீனா அணிகளிடம் இறுதிப் போட்டியில் நெதர்லாந்து தோல்வி கண்டுள்ளது.


எனவே இந்த முறையாவது நெதர்லாந்து கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று அந்த நாட்டு மக்கள் மிகுந்த பிரயாசைப்பட்டனர்.

எனவே நேற்று முன்தினம் நெதர்லாந்தில் ஆம்ஸ்டர்டாம், ராட்டர்டாம் உள்ளிட்ட நகரங்களில் உள்ள தேவாலயங்களில் நெதர்லாந்து வெற்றிபெற வேண்டி சிறப்பு பிரார்த்தனைகள் நடந்தன.

இந்த பிரார்த்தனையில் ஏராளமான மக்கள் நெதர்லாந்து அணியின் ஒரேஞ்சு வர்ண உடையை அணிந்து கலந்து கொண்டனர். அவர்கள் கையில் ஜவுலானி பந்தும் இருந்தது.

ஒரேஞ்சு வர்ண கோல்கம்பங்கள் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த சிறப்பு பிரார்த்தனையில் தேவாலய பாதிரியார்களும், போதகர்களும் உதவியார்களும் கூட அவர்களது வழக்கமான



வெள்ளை அங்கிகளுக்கு பதிலாக ஒரேஞ்சு வர்ண அங்கி அணிந்து கலந்து கொண்டனர்.

மெழுகுவர்த்திகள் ஒரேஞ்சு வர்ணத்தில் இருந்தன. பியானோர்கள் மீதும் ஒரேஞ்சு வர்ண கொடிகள் போர்த்தப்பட்டு இருந்தது.

ஸ்பெயின் அணிதான் வெற்றி பெறும் என்ற பால் ஒக்டோபர்ஸின் கணிப்பு பொய்க்க வேண்டும் என்பதே நெதர்லாந்து மக்களின் முக்கிய பிரார்த்தனையாக இருந்தது.

ஆனால் இந்த பிரார்த்தனையும் மீறி பாலின் கணிப்பு உண்மையாகிவிட்டது.



வேலணை வைத்தியசாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த தர்சிகாவின் பூதவுடலையும் அஞ்சலி நிகழ்வையும் குடும்பநல உத்தியோகத்தர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் செல்வதையும் படங்களில் காணலாம்.

## சுகாதார சேவைகள் பணிமனைக்கு...

விளக்கக் கடிதத்தில் உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் அவ் விளக்கக் கடிதம் சம்பந்தப்பட்ட வைத்தியரைப் பாதுகாக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளதாகவும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்தது.

எனினும் தனது விளக்கக் கடிதம் குடும்ப நல உத்தியோகத்தர் சங்க செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அது கிடைக்கவில்லை எனத் தெரிவித்தே குடும்ப நல உத்தியோகத்தர்களினால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் யாழ். சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஏ)




## குடத்தனையில் உப பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குக் குடத்தனையில் உப பொலிஸ் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை வரணிச்சந்தி ஆறாம் கட்டப் பகுதியில் மேற்படி உப பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கீழ் இந்த உப நிலையம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மூவர் அடங்கிய குழு...

திணைக்களத்தினால் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக்குற்றச்சாட்டுக்கள்எழுந்துள்ளன.

இது தவறான குற்றச்சாட்டுக்களாகும். சம்பவம் இடம்பெற்ற மறுநாள் காலையில் எனது தலைமையிலான குழுவொன்று வேலணை வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பந்தப்பட்ட வைத்தியரும் உடனடியாக இடமாற்றப்பட்டார்.

அத்துடன் இரண்டு வைத்தியர்கள் மற்றும் ஒரு நிர்வாக உத்தியோகத்தர் அடங்கிய விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டு அக்குழு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இக்குழுவில் வைத்தியர்களான சிவபாதம், சிவராணி மற்றும் நிர்வாக உத்தியோகத்தரான ஜெயவசீகரன் ஆகியோர் அடங்குவர்.

அவர்களின் இறுதி அறிக்கை கிடைத்ததும் சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டு குறிப்பிட்ட வைத்தியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இச் சம்பவம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் பிரஸ்தாப வைத்திய ருக்கு எதிராக எம்மால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

அவரின் பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக அவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை விசாரணைகள் முடியும் வரை பிரஸ்தாப வைத்தியர் வெளியிடங்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ச)

## ஜனாதிபதி...

தொடர்பிலும் இந்தியத் தலைவர்களிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

13-வது திருத்தச் சட்ட மூலம் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் 13-வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பிலும் இந்தப்பேச்சு வார்த்தைகளின் போது வலியுறுத்தப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## உண்ணாவிரதம் என்றால்...

குழுவைக் கலைக்கும் வரை சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைத் தொடர்வார் என்றும் அதன் போது அவரது உயிர் பிரிந்தால் ஆதரவாளர்கள் போராட்டத் தைத் தொடர வேண்டும் என்றும் விமல் கூறியிருந்தார்.

ஆனால் ஐ.நாவின் நிபுணர் குழு கலைக்கப்படாதபோதும் அவர் உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளார். எமது நாட்டில் இரண்டு மூன்று தினங்கள் உண்ணாமல் இருப்பவர் கள் ஏராளம் உள்ளனர்.

இப்படியிருக்க விமல் வீரவன்சவின் போராட்டத்தை எப்படி உண்ணாவிரதம் என்று கூறலாம்?

விமல் சாகும் வரையில் ஒரு போதும் உண்ணாவிரதம் இருக்கப் போகின்றமையும் இல்லை. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவைக் கலைக்கப் போகின்றமையும் இல்லை.

சாகும் வரையிலான உண்ணாவிரதம் என்றால் என்னவென்பதை தியாகி திலீபனிடம் இவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். மாறாகப் பொதுமக்களை ஏமாற்றி இப்படியான கோமாளி நாடகங்களை அரங்கேற்றி எமது நாட்டுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தி விடக் கூடாது என அவர் கூறினார். (ச-5)

## ஐ.நா...

பட்டிருந்தார்.

இதன் பின்னர் இலங்கை திரும்பிய அவரைப் பான் கீ மூன் மீண்டும் இலங்கை தொடர்பான கலந்தாலோசனைகளுக்காக நியூயோர்க்கிற்கு அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரிகள் அபிவிருத்தி சம்பந்தமாகக் கிழக்கு மாகாணத்திற்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் விமல் வீரவன்ச தலை மையிலான தேசிய சுதந்திர முன் னணி மீண்டும் தாம் ஐக்கிய நாடுகள் சபை, சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி ஆகியவற்றுக்கு எதிராக ஜெனீவாவில் போராட்டத்தை நடத்தப் போவதாக எச்சரித்துள்ளது. (ச-5)





## கிருஷ்ணா அடகு கடை

**இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

*பதிவு இல.:* J /DS /BR / 472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2009-ம் ஆண்டு யூன் மாதம் 30ஆம் திகதி(30.06.2009)இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாமல் இருக்கும் அடகு நகைகள் யாவற்றையும் 2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15-ம் திகதி (15.08.2010)க்கு முன்பு மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதிப் பணத்தைக்கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.08.2010ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - உரிமையாளர்

தொ.பே.: 0212225046

(C-635)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.